Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 321 ஆனி. June. 2023

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

29th years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
33 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் இலங்கை?

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

இலங்கைச் சிறப்பிதழ்





29 ஆம் ஆண்டு நிறைவில்
மகிழும் உங்கள் வெற்றிமணி
01.06.2023



## சர்வதேச சந்தையில் யாழ்.,'கதலி'

## "எழுதாத கவிதைக்கு முதல் பரிசு"
(குறும் படம்)






# 1965 இல் எமது நவிக்கேஷன்

நேராகப் போங்கள் ஒரு முயல் படம் போட்ட மதில் வரும், பின் இடதுபக்கம் பாருங்கள் மதில் தூணில் நந்தி (மாடு) ஒன்று இருக்கும், அடுத்த, மதில் தூணில் யானை இருக்கும்.

இவை இரண்டுக்கும் இடையால் போகும் ஒழுங்கையால் போக, மரத்தடியில், ஒரு வயிரவர் சூலம் இருக்கும், ஒரு கூப்பிடுதூரம் கடக்க வலது பக்கம் பாடசாலை. மாமரத்தில் ஒரு தண்டவாளத்துண்டு மணி அடிக்க மரத்தில் தொங்கும், எதிர்த்தாப்போல் ஒரு வாசிகசாலை இருக்கும். மேலே சரஸ்வதி சிலை இருக்கும். அவ்விடத்தில் கேட்டால் நவசிவாயவாத்தியார் வீட்டை காட்டுவினம்.

சில சமயம் நவசிவாயா வாத்தியாரே நான்தான், என்று தன் வீட்டிற்கு கூட்டிப்போவார்.

அவருடைய வீட்டு படலைக்கு நேரே, மாடுரோஞ்சிக் கல்லும், சிறு கேணியும் இருக்கும். பொழிப்பாக கவனிக்கவும், மீண்டும் வருகில் உதவும்.

திருப்பிவரும் போது, வாத்தியார் பேரன் தெருவரைக்கும் கொண்டு வந்துவிடுவான். தெரு மூலையில் இருக்கும் கடையில் 10 சததிற்கு தோடம்பழ இனிப்பு வாங்கி கொடுக்கவும், சைக்கிள் வளையத்தை உருட்டிக் கொண்டு அவன் பறப்பான். கல் தடுக்கி சில நேரம் விழுவான். முழங்காலில் இரத்தம் சொட்டும், கவலையே படாதீர்கள், மண்ணைக் கையில் எடுத்து முழங்காலில் தடவிக்கொண்டு மீண்டும் பறப்பான்.இதுதான் 1965 இல் எமது நவிக்கேஷன். குறிதப்பாது.



● மாதவி














வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 321



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)



பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் இலங்கை?



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் காலங்கடத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருவாறு வெற்றி பெற்றிருக்கின்றார். தேர்தலை நடத்தாவிட்டால், போராட்டம் வெடிக்கும் எனக் கர்ஜித்த எதிர்க்கட்சியினர் மௌனமாகிவிட்டார்கள். இந்த நிலையில், ரணிலின் கவனம் இப்போது ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நகர்ந்திருக்கின்றது. இதற்காக அவர் எவ்வாறான வியுகங்களை வகுக்கின்றார், கள நிலைமைகள் எவ்வாறுள்ளன என்பதையிட்டு இந்த இதழில் பார்ப்போம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கு ஜனாதிபதி விரும்பாமைக்கான காரணம் ரகசியமானதான் புலனாய்வுத் தகவல். அதேபோல ஐ.தே.க.வும் பொ.ஜ.பெரமுனவும் பெரும் தோல்வியைச் சந்திக்க வேண்டியிருந்திருக்கும். இவ்வாறான ஒரு தேர்தல் முடிவு அடுத்ததாக வரப்போகும் தேர்தல்களிலும் பிரதிபலிக்கும். அதனால்தான், ஏதோகாரணங்களைச் சொல்லி உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதில் ரணில் வெற்றிபெற்றிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இது தனக்கு வாய்ப்பான ஒரு காலம் என ரணில் கருதுவதற்கும் காரணங்கள் உள்ளன. முதலாவதாக – பொருளாதார நெருக்கடியை தீர்த்துவைத்தவர் என்ற வகையில் ரணிலின் இமேஜ் இப்போது இலங்கை அரசியலில் உயா்ந்திருக்கின்



தல்ல. புலனாய்வுத் துறையினர் கொடுத்த சில தகவல்கள்தான் அதற்குக் காரணம். கடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட பாரிய தோல்வியைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் கிராமிய மட்டத்திலான கட்டமைப்புக்கள் அனைத்தும் சிதைந்து போயிருக்கின்றன. அதேவேளையில் ஜே.வி.பி.யின் கட்டமைப்புக்கள் பலமாக இருக்கின்றன. பொதுஜன பெரமுன கிராமங்கள் பலவற்றுக்கு செல்ல முடியாத நிலை உள்ளது.

இந்த நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால், ஜே.வி.பி.யும் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியும்தான் அதிக இடங்களைப் பெறும் என்பது

றது. இரண்டாவது பொஜன பெரமுனவைப் பொறுத்தவரையில், ராஜபக்ஷக்கள் மீதான அதிருப்தி இன்னும் குறையவில்லை. அதனால் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மண்ணைக் கவ்வ அவர்கள் விரும்பமாட்டார்கள். ரணில் தொடா்ந்தும் அதிகாரத்தில் இருப்பதுதான் தமக்கு பாதுகாப்பு என ராஜபக்ஷக்கள் கருதுகின்றார்கள். அதனால், ராஜபக்ஷக்கள் யாரும் இந்த முறை களத்தில் இறங்கமாட்டர்கள். பதிலாக, ரணிலை ஆதரிப்பது என்ற முடிவை அவர்கள் எடுக்கலாம்.

ஐக்கிய மக்கள் சக்தி தமது சார்பில் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார் என அறிவித்திருக்கின்றது. சஜித் அணிக்குள்ளும் இவ்விடயத்தில் முரண்பாடுகள் உள்ளன. சம்பிக ரணவக்க, சரத் பொன்சேக ஆகியோரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புகின்றார்கள். அதனால்தான் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் கூடிய ஐ.ம.ச. தமது ஜனாதிபதி வேட்பாளர் சஜித் என்பதை பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது. அவரைவிட ஜே.வி.பி.யின் சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க களமிறங்குவார். ஜே.வி.பி.க்கு கிராம மட்டத்தில் செல்வாக்கு இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு இல்லை.

இந்த நிலையில் ரணில் – சஜித் – அனுரா என போட்டி வரும்போது, ரணிலின் கை ஓங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. தமிழ், முஸ்லிம், மலையக மக்களுடைய வாக்குகளையும் அறுவடை செய்யக்கூடியவராக ரணில்தான் உள்ளார். சிங்களப் பகுதிகளில் பொருஜன பெரமுன அவரை ஆதரிக்கும். இந்தக் கணக்குகளைப் பார்த்த நிலையில்தான் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான உபாயங்களை ரணில் வகுத்துவருகின்றார். எதிர்வரும் நவம்பரின் பின்னர் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத் திருத்தம் ஒன்று நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவிருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு பணமில்லாத நாட்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு மட்டும் எவ்வாறு கணம் கிடைத்தது என யாரும் கேட்டாலும் அதற்காக கவலைப்படுபவராக ரணில் இல்லை!







## சுட்டெரிக்கும் வெய்யிலில் இரு தினங்களில் சுட்டுத்தள்ளிய ஒரு குறும்படம்



# "எழுதாத கவிதைக்கு முதல் பரிசு"

## பருத்தித்துறை சூழலில் ஒரு கதை மையம்கொண்டது

குறுகிய காலத்தில் எடுப்பது ஒரு கலை. கரு ஒன்று கிடைத்து விட்டால் அதனை சிதைக்காது வளர்த்து எடுப்பது முக்கியம்.

ஒரு ஓவியக் கலைஞனுக்கு அழித்து அழித்து வரைவதும் பிடிக்காது, நீண்ட நேரம் ஓவியத்துள் நின்று மாற்றி மாற்றி, இருப்பதைக் கெடுப்பதும் பிடிக்காது. அது ஒரு மடைதிறந்த வெள்ளம் போன்று இருக்க வேண்டும்.

கலைஞனின் கைகளில் கமரா. அது பல கோணங்களை அழகுநயத்துடன் ஆளும். கைகளை விட்டு அகலாத கமரா. அசைவுகள் உயிர்ப்புடன் இருக்க அவசியம். ஸ்ராண் அது ஒரு மூலையில் இருந்து வேடிக்கை பார்க்க, காட்சிகள் கச்சிதமாக படமாக்க, 'எழுதாத கவிதைக்கு முதல் பரிசு' என்னும் குறும்படம் கடந்த 09.10,மே.2023 இருதினங்களில் வடமாகாணத்தில் எடுத்து முடிக்கப்பட்டது.




கதை, வசனம், பாடல், ஒளிப்பதிவு இயக்கம் கண்ணா. B.F.A. இசை, சஞ்ஜே சிவா.வெற்றிமணி தயாரிப்பில் வெளிவரும் இக் குறும் படத்தின் நிர்வாக முகாமையாளராக சாந்தி. தெய்வேந்திரன் அவர்களின் அற்பணிப்பான சேவையால் குறுகிய காலத்தில் இது சாத்தியமானது.

கண்ணாவின் இயக்கத்தில் வெளிவந்த தம்பட்டம் குறும் படமும், குறுகியகாலத் தயாரிப்பு. பலரது பாராட்டைப் பெற்றது.

நடிகர்கள் காட்சிக்கேற்ப தெரிவு செய்யப்பட்டனர். படத்தில் ஆச்சியின் நடிப்பும், கவிதையின் பாத்திரமும் பேசப்படும். ஒரு கட்டத்தில் பருத்தித்துறை டாக்டர் முருகானந்தன் அவர்கள் ஒரு காட்சியில் இயல்பாக வந்து போகிறார். அவர் எமக்கு தந்த ஆதரவு ஈழத்தில் குறும் பட வளர்ச்சிக்கான பெரும் அக்கறையாகவே கொள்ள வேண்டும்.

குறும் படத்தில் பங்குகொண்ட கலைஞர்கள் (ஆச்சி) சின்னப்பிள்ளை,(அப்பு) கிருஷ்ணன், அனித்தா, ஜெயந்தன், லோகநாயகி ஸ்ரீஸ்கந்தராஜா,டாக்டர் முருகானந்தம் ( டிஸ்பென்சரி பருத்தித்துறை டிப்போவுக்கு அருகாமையில்) சாந்தி, தெய்வேந்திரன், தெய்வேந்திரன் சேனாதிராசா (யோ) கவிஞர் வடிவேல் வடிவேலழகையன், ஆகியோர் இவர்களுடன், பல துணை நடிகர்களும் பங்கு எடுத்தனர்.

காட்சிகள் யாவும் வடக்கில் பருத்தித்துறை முனை கடற்கரை, வல்லிபுரக் கோவில், சுட்டிபுரம், New way, Super Market, Main Street, Point Pedro. வயற்காடு மட்டுவில் நுணாவில் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, காரைநகர், ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. அனித்தா அனுபவமிக்க ஒரு சிறந்த நடிகையாக தொனிக்கின்றார். இவர்கள் அனைவரது ஒத்துழைப்புக்கும் வெற்றிமணி நன்றி கூறுகின்றது. வெகுவிரைவில் யேர்மனியில் திரையிடப்படும்.








# கட்டமைப்புக்குள் மலையக பெண்கள்!

மலையகம் என்பதும் அதன் வரலாறுகள் என்பதும் தனித்துவமானது, மலையக வரலாற்றில் பெண்களின் பங்களிப்பு என்பது முழுமையாக இருந்தாலும் அதன் அங்கீகாரம் , அடையாளப்படுத்தல்கள் என்பது இல்லாத நிலையே நிலவுகிறது.

மகளிர் தினங்களில் சிங்கப்பெண்ணே முழக்கதோடு மட்டுமே சமூகத்தின் அங்கீகாரம் தங்கி உள்ளது, எதுவரை அவர்களின் சுதந்திரம், எதுவரை அவர்களின் அங்கீகாரம் என்பது எல்லாம் யாரோ ஒருவரை தங்கியுள்ளது. 2010ம் ஆண்டு தனியார் தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்ட ஆய்வுகளின்படி, சுயமாக முடிவு எடுக்க முடியாத நிலையில் மலையக பெருந்தோட்ட துறை பெண்களில் கணிசமானவர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படை காரணிகளாக பல்வேறுபட்ட விடயங்கள் இருப்பதாலும் அவற்றில் அடிப்படைவாத மூட சிந்தனைகள் இருப்பதுவுமே பிரதான காரணமாக சொல்லவேண்டும். தமிழர் கலாச்சார அடிப்படையில் நோக்கினால் ஆரம்ப காலத்தில் போரில் , வீரத்தில் ஆணுக்கு பெண் சமமே கொள்ளப்பட்டது. சமயத்தின் அடிப்படையில் நோக்கினால் ஆணும் பெண்ணும் சமமே ஆகும். ஆக இவ்வாறு எல்லாமும் பெண்ணுக்கும் சரிநிகரான சமத்துவ சமூகவியல் கட்டமைப்பு காணுகிற நிலையில் மலையக பெண்களின் அடிப்படை கட்டமைப்பு எதற்காக பிறரை சார்ந்து இருக்கவேண்டிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பது மிக ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயமாகும் .

தடுக்கி விழுந்தால் தேயிலை தோட்டமும், தூர சென்று விழுந்தால் தலை நகர ஆடைத்தொழிற்சாலையும், வீட்டு வேலையும் என தனக்கான வாழ்க்கை எல்லையை எதற்காக மலையக பெருந்தோட்ட துறை பெண்கள் வகுத்து கொண்டார்கள் என சிந்திக்கவேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.



மாலினி
கொட்டகலை
(இலங்கை)

இதற்காக மலையகத்தில் பெருந் தோட்ட துறை பெண்கள் சாதிக்கவில்லையா, கல்விகற்க வில்லையா? என்றால் நிச்சயமாக மறுக்க முடியாது. ஆனால் எத்தனை விழுக்காடுகள் என்பதுவே இங்கு முன்வைக்கப்படுகிற கேள்வியாகும்.

கடந்த சில வருடங்களில் மலையக பெண்களின் கல்வி வீதமும் , பல்கலைகழக அனுமதி முதற்கொண்டு, வேலைவாய்ப்புகள் என்பன கணிசமான அளவு உயர்ந்து உள்ளது, ஆனால் உலகமயமாக்கல் அடைப்படையில் உலகத்தோடு ஒப்பிடும்போது இது போதுமானதா? என்றால் நிச்சயமாக இல்லை, ஆக இதற்கான அடிப்படை காரணிகளை கண்டறிய வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும். தனியார் தொண்டு நிறுவனமொன்றின் தகவல்களின் அடிப்படையில், பெண்களுக்கான கற்கை விழிப்புணர்வு, சுய மேம்பாட்டு திட்டங்கள் சம்பந்தமான செயற்திட்டங்கள் வழக்கப்பட்டாலும் அவர்களின் வாழ்வியல் ரீதியாக பாரிய மாற்றங்களையோ அல்லது முன்னேற்றங்களையோ அவதானிக்க முடியவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது . ஆகவே இங்கே மாற்றப்படவேண்டியது அடிப்படை கட்டமைப்புகளையே ஆகும்.



சாதிய தீண்டாமை போன்றுதான், பெண்களின் சுதந்திரம், வாழ்வியலை யாரோ ஒருவர் தீர்மானிப்பது என்பது ஆகிறது. அதிகமான மலையக பெருந்தோட்ட துறை பெண்களின் கற்றல் குறிக்கோள் சாதாரண தரத்தை நோக்கி இருக்கிறது, அது முடிந்த பின்னர் தேயிலை அல்லது கொழும்பு வேலை என இரண்டில் ஒன்றை தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை.

இவர்களின் கற்றல் நடவடிக்கைளில் குடும்ப பொருளாதார சூழ்நிலை பெரும்பங்கு வகிக்கிறது என்பது இங்கு உன்னிப்பாக கவனிக்க வேண்டிய விடயமாகும். ஆகவே இந்த குறைந்த பட்ச தகமைகளோடு தமது வாழ்க்கையின் அடுத்தகட்ட நகர்வுக்கு இவர்கள் தள்ளப்படுகிறார்கள் என்பதே உண்மை.

குறிப்பாக குறிப்பிட்ட பெண்கள் வேறு வேலைகள் சம்பந்தமாக பயிற்சிகள் வழங்கலாம், அல்லது சுய வேலை வாய்ப்புகள் சம்மந்தமாக பயிற்சிகள் வழங்கலாம். கற்கை நெறி காலப்பகுதிகளில் அவர்களுக்கான போக்குவரத்து , மதிய உணவு , சிறு தொகை ஊதியம் வழங்கலாம்.

28 ஆம் பக்கம் பார்க்க...




Luckyfly
Lucky Fly Reisebüro
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
2023
EARLY BOOKING OFFER
QATAR
என்றும் குறைந்த விலையில் உங்கள் பயணங்கள் அமைய நாடுங்கள்.
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan Airlines
QATAR AIRWAYS
Emirates
Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# சீட்லெஸ் மாம்பழங்கள் சாத்தியமா?



**2022 ம்** ஆண்டு வெளியான 'கடைசி விவசாயி' திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். முதிய விவசாயி ஒருவர் தக்காளி விதைகள் வாங்க, கடைக்குப் போவார். வியாபாரி தக்காளி விதைகளைக் காட்டி இது ஹைபிறிட் விதை, கொத்துக் கொத்தாய்க் காய்க்கும், கூடைகூடையாய் அள்ளலாமெனச் சிலாகித்துச் சொல்வார்.


"ஓ" அப்படியா, அடுத்தமுறை நான் விதை வாங்க கடைக்கு வரவேண்டாமல்லவா. அறுவடைசெய்யும் பழங்களில் இருந்து விதைகளை எடுத்துப் போடலாம், என்பார்.

இல்லை, வந்துதான் ஆகணும். இதிலை விதையே இருக்காது.

அதெப்படி?

ஈச்சமரம், எலந்தை மரம், மாமரம் எல்லாத்திலும் விதையிருக்கு. எப்படித் தக்காளிக்கு விதையில்லாமல்போகும்? இது முதியவரின் கேள்வி. இது கலப்பு விதை, வெள்ளைக் காறன் செஞ்சது. விதை இருக்காது, என்பார் வியாபாரி.

அவனுக்குமாத்திரம் எப்படி விதை கிடைச்சுது? இந்த விதையைக் கண்டுபிடிச்சவனுக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளை பிறந்து, அதுக்கு விதைக்கொட்டை இல்லாமல் இருந்தால், அப்ப தெரியும் அவனுக்கு, எனச் சொல்லிவிட்டு விதையை வாங்காமலே போய்விடுவார் முதியவர்.






ஆ.சி.கந்தராஜா
(விவசாய பேராசிரியர்)
சிட்னி

இந்தக் காட்சி என் மனதில் ஆழமாகப் பதிந்து இன்று வரை நிலைத்திருப்பதற்கான காரணம் கொட்டையில்லாத பழங்களுக்கான மக்களின் அங்கலாய்ப்பும் அதை விருத்தி செய்ய முன்னெடுக்கப்படும் ஆராச்சி முனைப்புக் களுமே.

காலதிகாலமாக விதையில்லாத வாழை, அன்னாசிப் பழங்களையே நாம் சாப்பிட்டிருக்கிறோம். இதேவேளை ஒரு சில வாழை, அன்னாசி இனங்களில் விதைகள் இருப்பது பலருக்குத் தெரியாதது.

விதைகளற்ற தர்பூசணி (Water Melon) மற்றும் திராட்சை இனங்கள், பிற்காலத்தில் இனவிருத்தி ஆராச்சிகள் மூலம் உருவாக்கப்பட்டன.

தற்போது இணையத்தில் வைரலாகப் பரவிவரும் சீனமொழி வீடியோ பதிவொன்றில், விதை இல்லாத மாம்பழம் என்று ஒரு காட்சி வரும்.

இணைய வசதிகளைப் பாவித்து, யாரும் எதையும் பதிவிடலாம் என்ற நிலையே இன்று காணப்படுகிறது. இதில் உண்மையும், பொய்யும், போலியும் கலந்திருப்பது தவிக்கமுடியாதது.

அறிவியல் கோட்பாடுகளின்படி விதையில்லாத மாம்பழங்களை இனவிருத்தி செய்வது சாத்தியமே. ஆனால் நடைமுறையில் இது லேசுப்பட்ட விஷயமல்ல. எனது தீவிர அறிவியல் தேடுதலின்படி விதையில்லாத மாம்பழம் இற்றைவரை இனவிருத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. விதையில்லாத மாம்பழம் சந்தைக்கு வந்ததற்கான தகவல்களும் இல்லை.

கடைசி விவசாயி திரைப்படத்தை என்னுடன் பார்த்த மனைவி, படத்தில் முதிய விவசாயி, வியாபாரியிடம் கேட்ட கேள்வியை என்னிடம் கேட்டார்.

விதையில்லாத காய்களும் கனிகளும் எப்படி இனவிருத்தி செய்யப்படுகின்றன? விதைகள் இல்லாத தக்காளி விதைகளை விற்பவர்களுக்கு அந்த விதைகள் எப்படிக் கிடைத்தன?

இந்தக் கேள்விகள் உங்கள் மனங்களிலும் எழுவது நியாயமானதே.

'இருமடிய' (Diploid) தாவரங்களில் விதைகள் இருக்குமென்றும் 'மும்மடிய' (Triploid) தாவரங்கள் விதைகளற்ற பழங்களைக் கொடுக்குமென்றும், மேலெழுந்த வாரியாகப் பதில் சொன்னேன்.

எனது சுருக்கமான பதிலால் எரிச்சலடைந்த மனைவி, ஊர் உலகத்திலை உள்ளவைக்கு ஆறஅமர இருந்து விலாவாரியாகப் பதில் சொல்லுங்கோ, எனக்குமட்டும் சொல்லேலாது எனக் கோபப்பட்டார்.

ஒரு உயிரினம் எப்படி அமையவேண்டும் என்ற தகவல்கள் எல்லாம் கலத்தினுள்ளே (Cell) நூல் போன்ற அமைப்புடைய குரோமசோம்களில் (நிறமூர்த்தம் - Chromosome) பதியப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் சோடிசோடியாக இருக்கும். இவற்றை இருமடிய (Diploid) தாவரங்கள் என்போம். உலகில் பெரும்பாலானவை இந்த வகையே. இதேவேளை மூன்று நிறமூர்த்தங்கள் சேர்ந்திருந்தால் அவை மும்மடியம் (Trip loid) என்பர்.

இரண்டடுக்கு குரோமசோம் கொண்ட இருமடிய தாவரங்களில் விதைகள் இருக்கும். அவற்றை மூன்றடுக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...





# வாழ்க்கை ஒரு செவ்வகம்

## அவன் வீடு கட்டி முடியவும் பெட்டை சாமத்தியப்படவும் சரியா இருக்கும்!

"உங்களுக்கு என்ன விசரே பிள்ளைகள் எல்லாம் வளந்திட்டுது " எண்ட பதில் அரும்பாமலே பல ஆசை இரவுகளை கருக்கி விட்டிடுது இப்ப பலருக்கு. அட ஐஞ்சு அறையோட இருக்கிற இந்தக் காலத்தில இப்படி எண்டால் அந்தக் காலத்தில ஒரே அறையில எட்டுப் பத்தெண்டு பெத்தது எப்பிடி எண்டு எனக்குத் தெரியேல்லை. " அவள் கெட்டிக்காரி எண்டு கன பிள்ளை பெத்த அம்மாமாரை பாத்துச் சனங்கள் சொன்னது எந்தக் கெட்டித் தனத்துக்கு எண்டு அப்ப விளங்கேல்லை.

ஊரில கலியாணம் பேசேக்க சீதனமா கட்டாயமா வீடு மற்றது எல்லாம் நஒவசய. சீதனமா வீடு எண்டோன்ன ஏதோ சொத்துக் கிடைச்சிட்டு எண்டு ஆசைப்படக்கூடாது. எழுதிற வீட்டுக்கு சீவிய உரித்து வைச்சுத் தான் எழுதுவினம். அதை விக்கவும் ஏலாது (அடகு) வைக்கவும் ஏலாது. ளுது சூரியான்டை னயைடழப மாதிரி " இருக்கு ஆனா இல்லை". ஆனபடியா சீதன வீட்டை போய் இருந்த படி பிறகு எல்லாரும் தங்களுக்கெண்டு ஒரு வீடு கட்டிப் போறது தான் வழமை.

யாழ்ப்பாணத்தில கலியாணம் கட்டிற ஆம்பிளைகள் எல்லாரும் வீட்டோட மாப்பிளைமார் தான். மாப்பிளைக்கு வேலை கிடைச்சோன்னயே ஊரில கலியாணம் சரிவந்திடும். பத்து வயசு வித்தியாசத்தோட பதினெட்டில ஒரு மனிசியைக் கட்டிவைப்பினம். கட்டிறாக்கள் எல்லாம் வீட்டோடை மாப்பிளை எண்ட படியால் மாமியார் மருமோள் சண்டை ஊரில குறைவு. கட்டின மனிசி கலியாணத்துக்குப் பிறகு தான் தன்டை அம்மாவைக் கேட்டு கேட்டு எல்லாத்தையும் பழகும் ஆனாலும் அடுத்த வருசமே பிள்ளை பிறந்திடும்.

வீட்டை சீதனமா வாங்கி வாற மாப்பிளைமார் சீதன வீட்டில ஒரு அறைக்குள்ளயே இருந்தபடி தான் குடும்பம் நடந்துவினம். ஆனாலும் பத்துக்கு மேல பிள்ளைப் பெத்துடுவினம். பெரும்பாலும் வெளியூரில வேலை செய்யிற மாப்பிளை வந்து நிக்கேக்க ஒரு நாள் பங்கு இறைச்சி, ஒரு நாள் கூழ் எண்டு மாமி கவனிப்பா. புருசன் கேட்டா மட்டும் பேசிற மாமி மருமோனுக்கு தீபாவளிக்கெண்டு வளக்கிற வெள்ளடியனை வெள்ளி செவ்வாய் கூடப் பாக்காம ஆவணியிலயே அடிச்சுக் குடுப்பா. மாப்பிள்ளை ஊரை விட்டு போய் நிக்கிறவர் போற இடத்தில மேஞ்சாலும் எண்டு பயத்தில மாமியார் இங்க வரேக்க சாப்பாடு போட்டு வடிவாக் கவனிச்சு அனுப்புவா.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

மகள் பெத்து விட்டாலும் பேரப்பள்ளை மாரை வளக்கிறது அம்மம்மாவும், தாத் தாவும்,சித்தி மாரும் தான். பேரப்பிள்ளை பாசம் இருந்தாலும் எல்லாமே தன்டை பிள்ளைக்காகத் தான் அம்மா செய்வா. மருமோன் வந்து நிண்டா இண்டைக்கு நீ என்னோட படு எண்டு குஞ்சுகளை கூப்பிட்டு மாமியார் வழி சமைச்சுக் குடு ப்பா. காலமை மகள் வேளைக்கே எழும்பி விழுந்து விழுந்து "அவரை" கவனிக்க அம்மா சந்தோசப்படுவா.

அம்மம்மாவோட வளரிற பேரப்பிள்ளைகளுக்கு அம்மாவழி உறவுகள் நல்லதாகவும் அப்பா வழி எல்லாம் வெத்தாகவுமே காட்டப்படுறதால அநேமா அம்மாவழி உறவுகள் பலமாக இருக்கிறது தவிர்க்க முடியாததாகிவிடும். அதோட வாற மூத்த மருமோனுக்கு எல்லாம் நீங்க தான் எண்டு தூக்கித் தலப்பா கட்டி மச்சாள், மச்சான் மாரைக் கரை சேக்கிற பொறுப்பை குடுத்திடுவினம். மகன் அங்காலயே மினக்கடிறதால தான் சம்மந்திமார் முறுகல் வாறது. அப்ப ஒரு காலத்தில அக்கா செத்தாலோ வருத்தமாப் போனாலோ தங்கச்சி இலவச இணைப்பாக் கிடைக்கும் எண்டு தேடிக் கட்டினாக்களும் இருக்கினம்.

பிள்ளைகளை பெத்து, வளர்த்து காசை செலவளிச்சாலும் அதுக்குள்ளேயும் கொஞ்சம் கொஞ்சமா மிச்சம் பிடிச்சு தங்களுக்கு எண்டு ஒரு வீட்டைக் கட்டுவினம் வாங்கின சீதனக் காணியில. எல்லா ஆம்பிளைகளுக்கும் வீடு எண்டது ஒரு வாழ் நாள் சாதனை. அப்பாமார் ஒரு நாளும் அலட்டிறேல்லை ஆனாலும் அவைக்கு பெருமை எண்டால் உழைச்சு கட்டின வீடு தான். அந்தக் கட்டின வீட்டை இருந்து கட்டையில போறது தான் கனவு. ஆம்பிளை குடும்பத்தைப் பத்தி ஒண்டும் கதைக்காதவன் ஆனா ஊரெல்லாம் வீட்டைப் பத்தி மட்டும் கொஞ்சம் கூட்டிச் சொல்லுவான். அவன் வீடு கட்டி முடியவும் பெட்டை சாமத்தியப்படவும் சரியா இருக்கும். சாமத்தியப்பட்ட

30 ஆம் பக்கம் பார்க்க...








பி.பார்த்தீபன் (யாழ்ப்பாணம்)

# சர்வதேச சந்தையில் யாழ்ப்பாண 'கதலி'




யாழ்ப்பாணத்தின் விவசாய உற்பத்திகளில் பிரதானமானது வாழைப்பழம். அதிலும் கதலி வாழைப்பழத்துக்கு தனியான ஒரு கிராக்கி உள்ளது. அதன் சுவை தென்னிலங்கை வரை புகழ்பெற்றிருந்தது என்பது இப்போது பழைய கதையாகிவிட்டது. கடந்த மாதத்திலிருந்து யாழ்ப்பாணக் கதவிப் பழத்தின் புகழ் சர்வதேச மயமாகிவிட்டது. ஆம்! முதல் முறையாக யாழ்ப்பாணத்திலிருந்து கதலி வாழைப்பழம் டுபாய்க்கு ஏற்றுமதியாகின்றது.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் இது முக்கியமான ஒரு விடயம். ஆவர்களுடைய நீண்ட கால கனவு நனவாகியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பிரதான உற்பத்திப் பொருளான வாழைப்பழம் சுத்திகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, சீப்பு – சீப்பாக வெட்டப்படு, பெட்டிகளில் மொதி செய்யப்பட்டு டுபாய்க்கு செல்லத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் "புளி வாழை" என்று சொல்லப்படும் யாழ்ப்பாண கதலி வாழைப்பழம் முதல் முறையாக சர்வதேச சந்தைக்குச் சென்றிருக்கின்றது.

தென்னிலங்கை வரை பிரபலமான யாழ்ப்பாண வாழைப்பழம் இப்போது சர்வதேச சந்தையிலும் பிரசித்தமாகிவிட்டது. யாழ்ப்பாண கதலி வாழைப்பழத்தை இப்போது டுபாயிலுள்ள சுப்பர் மார்க்கெட்டுகளில் வாங்கமுடியும் என்பது யாழ்ப்பாண வாழைச் செய்கையாளர்களுக்கு நம்பிக்கையளிக்கும் ஒரு வெற்றிச் செய்தி. இது முதலாவது கட்டம்தான். இது வெற்றியளித்தால், மேலும் சில நாடுகளுக்கும் கதலி வாழைப்பழம் செல்லலாம்.

## நிலாவரையில் பதப்படுத்தல்

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இருந்து டுபாய்க்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் மே 3 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நிலாவரை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட வாழைக்குலைகளே இவ்வாறு முதற்கட்டமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், தெல்லிப்பளை போன்ற பகுதிகள் வாழைச் செய்கைக்கு பெயர் போனவை. கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைக்குலைகள் நிலாவரையில் உள்ள வாழைக்குலை பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு, பெட்டிகளில் அடைக்கப்பட்டு அங்கிருந்து நேரடியாக கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு டுபாய்க்கு கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

## ஒவ்வொரு வாரமும் 10 ஆயிரம் கிலோ

இந்த திட்டத்தின் முதற்கட்டமாக 10,000 கிலோகிராம் வாழைப்பழத்தை வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது முதலாவது கட்டம். இதன் அடுத்த கட்டமாக ஏற்றுமதித் தொகை அதிகரிக்கப்படலாம். முதலாவது கட்டம் எந்தளவுக்கு சிறப்பாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது – அதற்கான வரவேற்பு எவ்வாறுள்ளது என்பதைப் பொறுத்து அடுத்த கட்டங்கள் அமையும். டுபாய் தவிர்ந்த வேறு சில நாடுகளிலும் வாழைப்பழங்களுக்கான சந்தைவாய்ப்புள்ளது.



வாராந்தம் பத்தாயிரம் கிலோவை வழங்குவது என்பது யாழ்ப்பாண வாழைக்குலைச் செய்கையாளர்களைப் பொறுத்தவரையில் கடினமான ஒரு பணியல்ல. வெளிநாட்டு சந்தை வாய்ப்பின் மூலமாக அதிக வருவாய் கிடைக்கின்து என்பதால் அவர்கள் அதிகளவு உற்சாகத்துடனும் ஈடுபாட்டுடன் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு க்களும் இருக்கின்றன. இதனால் உற்பத்தியின் அளவும், தரமும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

இந்த ஏற்றுமதித் திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று – இது நூறு வீதம் இயற்கை விவசாய முறையில் செய்யப்படுகின்றது. இரசாயண உரங்கள் எதுவும் பயன்படுத்தப்படாமல் செய்கை பண்ணப்பட்ட வாழைப்பழங்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலான விவசாயிகள் இயற்கை உரங்களைத்தான் பயன்படுத்துகின்றார்கள் என்பதால் இது அவர்களுக்குப் பிரச்சினையல்ல.

## முக்கியமான மைல் கல்

இந்த ஏற்றுமதித் திட்டம் தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அம்பலவாணர்

10 ஆம் பக்கம் பார்க்க...





# சர்வதேச சந்தையில் யாழ்ப்பாண 'கதலி'

சிவபாலசுந்தரத்திடம் கருத்துக் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். “விவசாய உற்பத்திகளை நவீன மயமாக்குவதன் மூலமாக பெருக்கிக்கொள்வதும், அவற்றுக்கு பெறுமதி சேர்ப்பதும் அவற்றை உலக சந்தைக்கு அறிமுகப்படுத்துவதும் ஒரு முக்கியமான செயற்பாடாகும். வடமாகாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் நீண்டகாலமாகச் செயற்படுத்தப்பட்டு வந்தாலும், இப்போதுதான் அது முக்கியமான மைல்கல்லை எட்டியிருக்கின்றது.

எங்களுடைய யாழ்ப்பாணத்துக்கே உரித்தான கதலி வாழைப்பழம் இப்போது ஏற்றுமதிப் பொருளாக மாறியிருக்கின்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலமாக இதனைச் செயற்படுத்தி யிருக்கின்றார்கள். இந்தத் திட்டம் முன்மொழியப்பட்ட காலப்பகுதியில் நான் விவசாய அமைச்சின் செயலாளராக இருந்தேன். எங்களுடைய நீண்டகால எதிர்பார்ப்பு ஒன்று இதன் மூலமாக நிறைவேறியிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

## மேலும் திட்டங்கள் பரிசீலனையில்

எங்களுடைய யாழ்ப்பாண வாழைப்பழ உற்பத்தியாளர்களின் கதலி வாழைப்பழங்கள் இப்போது உலக சந்தைக்குச் செல்கின்றது. இது மட்டுமன்றி இது போன்ற வேறு சிலவற்றையும் இந்தத் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம். அதற்கான பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டிருக் கின்றன. குறிப்பாக, இங்குள்ள எங்களுடைய பழச் செய்கையை மேம்படுத்துவது, பழச்சாறு உற்பத்தி போன்ற பலவற்றை ஊக்குவித்து அவற்றை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கான செயற்திட்டங்களை முன்மொழிந்துள்ளோம். எங்களுடைய விவசாயிகள் இதன் மூலமாக நன்மையடைய முடியும்.

இந்தத் திட்டம் இலங்கையில் இப்போது இரண்டு இடங்களில் செயற்படுத்தப்படுகின்றது. ஒன்று - இராஜாங்கனையில். இரண்டாவதாக இப்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது. யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்படும் திட்டத்தின் விஷேட அம்சம் என்னவென்றால், இந்த உற்பத்திகள் அனைத்தும் நூறு வீதம் இயற்கை விவசாயத்தின் மூலமாக விளைவிக்கப்படுகின்றது என்பதுதான். அதனால், அதற்கு நிறைவான ஒரு சந்தைவாய்ப்பு ஏற்படும் என்று நான் நம்புகின்றேன்.“







இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## செய்கையாளர்கள் உற்சாகத்தில்

இதன் மூலமாக எமது விவசாயிகள் அதிகளவுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அண்மைக்காலம் வரையில் வாழைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை இருந்தது. கதலி வாழை கிலோ 100 ரூபாவுக்குள்தான் விற்பனையாகியது. உற்பத்தியாளர்கள் கடைகளுக்கு கொடுக்கும் போது அதனையும் விட குறைந்த விலைக்குத்தான் கொடுத்தார்கள். இதனால் போதிய வருமானத்தை வருமானத்தை அவர்களால் பெற முடியவில்லை.

இப்போது வருமானம் உறுதிப்படுத்தப்படுவதால், இந்த முயற்சியில் மேலும் பலர் இறங்குவதற்கான வாய்ப்புள்ளது. இது வேலைவாய்ப்பை அதிகரிக்கும் அந்நியச் செலாவணி வருமானமும் இதன்மூலமாக அதிகரிக்கும். பதப்படுத்தல் - பொதியிடல் - ஏற்றுமதிச் செற்பாடு என்பதற்றின் மூலம் மேலும் ஒரு தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கின்றது. இந்த அனுபவம் யாழ்ப்பாண மக்களுக்கு புதிதானதாக இருந்தாலும், மேலும் விடயங்களில் இந்த அனுபவம் அவர்களுக்கு உதவலாம்.

ஏற்கனவே சீனாவிலிருந்தும் வாழைப்பழத்துக்கான கேள்வி இருந்தது. இராஜாங்கனையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடந்த நவம்பர் மாதத்திலிருந்து டுபாய்க்கும் இராஜாங்கனையிலிருந்து வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலையில் இந்தத் திட்டத்தின் மூலமாக 250 வாழைச் செய்கையாளா?கள் பயன்பெறுகின்றாா?கள். இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த ஏற்றுமதித் தொகையை வாராந்தம் 22,000 கிலோவாக அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவ்வாறாயின் சுமார் 750 விவசாயகக் குடும்பங்கள் இதன் மூலமாக நேரடியாகப் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பொருளாதாரத்துக்கு இது பெரும் பலமாக அமையும் என நம்பலாம்





# வீடு ஒரு வாழ்நாள் நூலகம்

திக்குவல்லை கமால் (இலங்கை)



கருவறையிலிருந்து வெளிப்பட்டது முதல் கல்லறைக்குச் சென்றடையும்வரை, எங்கோ ஒரு கூரையின் கீழ் ஒவ்வொருவரும் ஒதுங்க வேண்டியிருப்பதை எவராலும் மறுக்க முடியாது.அது தாய்வீடாகவோ தாரத்தின் வீடாகவோ தனது வீடாகவோ இருக்கலாம்.

ஒரு வீட்டின் நிலவுகைக்கு புறம் சார்ந்த காரணிகளுக்கு அப்பால், குடும்ப அங்கத்தவர்களின் அக ஆரோக்கியம் சார்ந்த காரணிகள் மிக முக்கியமானவை.இந்த அகம்சார் காரணிகள் என்றும் நின்று நிலைக்க, அதற்கான போஷாக்கை வழங்க ஒரு வீடு என்றென்றும் ஒரு நூலகமாகவும் குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரும் அதன் வாசகர்களாகவும் மாற வேண்டும்.

கல்வி என்பது குறிப்பிட்ட கால அளவாக வரையறுக்கப் பட்டுள்ளது.ஆரம்பக் கல்வி, இடைநிலை, உயர்தரம் ,பட்டக் கல்வி என்று விரிகிறது.ஒவ்வொரு நிலைக்கேற்ப பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் நடாத்தப் படுகின்றன.அதனையொட்டி தொழில் வாய்ப்புக்களும் பெறமுடியும்.


ஆனால் இந்த வாசிப்பு என்பது எந்தக் கால எல்லைக்கும் உட்பட்டதல்ல.எல்லாக் காலத்தையும் உள்வாங்கியது.வாழ்நாள் முழுவதும் வாசிப்பதற்கான வாய்ப்பு வீட்டில் மாத்திரமே கிடைக்கமுடியும்.

“ நீங்கள் ஒரு வாசகனாகும்போது ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பிக்கிறது“– என்கிறார் தோமஸ் ஜெபர்ஸன். ‘கண்டது கற்கப் பண்டிதனாவான் ‘என்ற பழமொழியையும் ஞாபகமூட்டிக் கொள்வது பொருத்தமானதே. ஒரு பிள்ளையைப் பொறுத்தமட்டில் வாசிப்பு எப்போது ஆரம்பிக்கிறது ? எங்கிருந்தி ஆரம்பிக்க வேண்டும்? என்பதெல்லாம் இன்றைய வியாக்கியானங்களின்படி வியப்பாக இருக்கலாம்.

ஆம் ஒரு தாய் கருவுற்றிருக்கும்போதே வாசிக்க வேண்டும் என்பர். அந்த வாசிப்பு குழந்தையையும் சென்றடைந்து மூளை விருத்தியை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையாய் மண்ணில் பிறந்து வளரவேண்டும் என்பதே எல்லாத் தாய்மார்களதும் கனவு. கர்ப்ப காலத்தில் போஷாக்கு, சுகாதார நடவடிக்கைகள் மாத்திரமன்றி நல்ல வாசிப்பும் தேவை என்பது புரிகிறதல்லவா? அதற்கு, ஏலவே வீட்டில் வாசிப்புச் சூழல் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது.

குழந்தை வளரும்போது அதன் வயதனுபவத்திற்கேற்ப சுதந்திரமாக வாசிக்கக்கூடிய சூழலும் வீட்டில் இருக்க வேண்டும். அதுமாத திரமன்றி, மூத்த உறுப்பினர்கள் வாசிப்பதை பிள்ளை அவதானிக்கக் கூடயதாகவும் அமைய வேண்டும்.குடும்பப் பொருளாதாரத்தின் ஒரு சிறு பகுதியை ஒதுக்கி பத்திரிகை, சஞ்சிகை, புத்தகம் வாங்குவதை



வீண் செலவாகப் கருதும் மனோநிலையில் பல பெற்றார்கள் இருக்கின்றனர்.அது ஒரு மூலதனம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

எமது எல்லாப் பாடசாலைகளிலும் நூலகங்கள் காணப்படுவதில்லை.எவ்வாறாயினும் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் வாசிப்புச் சூழல் அமையவேண்டுமென்பதை எந்தளவுக்கு சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டு செயற்படுகிறார்கள் என்பது சந்தேகமானதே.

வீட்டிலோ வகுப்பறையிலோ வாசிப்புச் சூழலுக்கு உள்ளாகாத மாணவர்கள், உரத்து வாசித்தல்...வேகமாக வாசித்தல்... உறுப்பமைய வாசித்தல்...சொற்கள் இடம் மாறாமல் வாசித்தல் ...போன்ற மொழித் திறன் பரீட்சிப்புகளையே வாசிப்பு என்று எடுத்துக் கொள்ளும் வாய்ப்புண்டு.வீட்டு வாசிப்பு சீராக அமையும்போதே சரியான அர்த்தப்பாடு உறுதியாகும்.

ஒரு பிள்ளை அல்லது எதிர்கால மனிதன், வாசிப்பதனால் எதிர்பாராமலேயே ஏற்படும் அடைவுகள் ஒன்றிரண்டல்ல. பல்வேறு புதிய விடயங்களைத் தெரிந்து கொள்ளல், கல்வி விருத்திக்குத் துணையாதல், நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தல், பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டல், கேள்விகளும் தேடலும் ஏற்படல், மனச்சாந்தி மலர்தல், கற்பனை விருத்தி, நல்லுணர்வு பெறல், கலாசாரப் புரிந்துணர்வு, மனிதாபிமானம் , பன்முகப் பண்பாடறிதல், மனித உறவு மேம்பாடு, உளவிருத்தி, கிரகிப்புத் தன்மை, மொழித் திறன் ,தன்னம்பிக்கை வளர்தல், ஞாபக சக்கி , ஆளுமைப் பண்பு, இப்படி இன்னும் பல.வீட்டு வாசிப்புக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்போது பெருந்தொகையான அடைவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

வீட்டுத் தோட்டம் ,குடுப்பத்திற்கொரு கைத்தொழில் என்பன போன்று வீட்டுக்கொரு நூலகம் என்ற எண்ணக் கருவை விருத்தியாக்குவதற்காக பன்முகப்பட்ட வேலைத்திட்டம் அவசியமாகிறது. கல்வி அமைச்சு, கலாசார அமைச்சு,நூலக அபிவிரித்தி சேவைகள் சபை, உள்ளூராட்சி சபைகள் போன்றன மேலும் திட்டமிட்டு உயிர்ப்புடன் செயற்படலாம்.இவ்வகையில் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் முனைப்புடன் இயங்கி வருகின்றன.

கிராம மட்டங்களிலே இயங்கும் சமூக நிறுவனங்கள் மிகவும் பயனுறுதியுள்ள வகையில் இயங்கக்கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ளன.தத்தமது கிராமங்களுக்குத் தமது பங்களிப்பை வளங்கும் அரிய சந்தர்ப்பமாக இதனை அமைத்துக் கொள்ளலாம். தரும நிறுவனங்களும் வழிபாட்டுத் தலங்



களும்கூட இதற்கு உதவலாம். பெற்றார்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்றவகையில் வீட்டு நூலகங்களையும் சிறுவர் வாசிப்பு ஆர்வத்தையும் எவ்வாறு வளர்க்கலாம் என்பதற்கு சில ஆலோசனைகள் வருமாறு.

- பிள்ளைகளுக்கான அன்பளிப்புக்களை நூல்களாக வழங்குதல்.
- பிள்ளைகள் தமக்கிடையிலான அன்பளிப்புக்களை நூல்களாக வழங்க வழிகாட்டல்.
- வாசிப்புச் சாதனங்களைப் பரவலாக்கல்.
- வாசிப்புக் கென்று நேரம் ஒதுக்கல்.
- வாசித்த விடயம் பற்றிக் கலந்துரையாடல்.
- நூலகம் – புத்தகக் காட்சி – நூல் வெளியீடுகளுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்லல்.
- வீட்டு நூலக நூல்களுக்கு தொடர் இலக்கமிட்டுப் பதிந்துவரல்.
- நண்பர்களுடன் பரஸ்பரம் புத்தகப் பரிமாற்றம் செய்தல்.
- வாசித்த நூலில் குறைந்தது ஒரு வசனத்தையாவது பதிந்துவரல்.
- பத்திரிகை நறுக்குகளால் ஒட்டுப் புத்தகம் தயாரித்தல்.

இன்று வாசிப்பு என்பது அச்சிடப்பட்ட பத்திரிகை, சஞ்சிகை, புத்தகம்

28 ஆம் பக்கம் பார்க்க...





INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2023
Tamil Streetfestival
01.09.2023
FR. 16:00 - 00:00
02.09.2023
SA. 11:00 - 00:00
03.09.2023
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
SIVANDIGITAL
VMDO
TKD
ortel MOBILE
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 27

கலாதூரி திவ்யா சுஜேன் (இலங்கை)

# பாரதி இயற்கை எழில் கொஞ்சும் இலங்காபுரி

இலங்கை , இலங்காபுரி, ஈழம், நாக தீபம், லங்காதுவீபம், செரண்டீப், தம்பப்பண்ணி, தப்ரபேன், மணி பல்லவம் எனப் பெயர் பல சொல்லி நம் தாயைப் போற்றிட “தேன் வந்து பாயுது காதினிலே“.

எங்கு சென்றாலும் நம் நாட்டின் இயற்கை வளங்களை எண்ணாது, வியாக்காது இருக்க முடியாது என்னும் அளவு இயற்கை தெய்வத்தின் ஆசீர் வாதங்களை பெற்ற அழகிய தீவாக இலங்கை மிளிர்கிறது. நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து சென்றாலும் நம் உயிர் நாட்டின் உணர்வுகள் ஓட்டிக்கொண்டே தான் இருக்கும்.

“நமதலை நினதடி மேல் வைத்தோம் நமதுயிரே தாயே !“

நீர்வளமும், நிலவளமும், கலை வளமும், கல்வி வளமும், துறைமுகமும், வணிகமும் சரித்திரமும் , புராணமும் கொண்ட நம் இலங்கைத் திருநாட்டின் கோடி வளங்களை எண்ணி எண்ணி உளச் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த வேளை , இதை அப்படியே இயலாக்கி, இசை கோர்த்து, நாட்டியம் ஆடினால் என்ன என்று ஆவல் பிறந்தது. காண்பதனைத்தையும் கலையாகிப் பார்க்கும் என் உள்ளத்தைக் கண்டு நகைத்து விட்டு , வழமை போல் என் கற்பனைகளுக்கு அன்புச்சிறகு தந்து உயர பறக்க விடும் இசைமேதை டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயாவிற்கு அழைப்பு விடுத்தேன்.

**இச்செய்தி கேட்ட மறு கணமே**
**“ இயற்கை எழில் கொஞ்சும் லங்காபுரி “ என்று ஆபோகி ராகத்தில் பாடினார்.**
**“தேன் வந்து பாயுது காதினிலே.**
**ஆஹா அதே தான் ஐயா,**

தொடர்வோம் இதனை வர்ணம் ஆக்குவோம் என்றேன்.

**“ஆக்கத்திலே தொழில்**
**ஊக்கத்திலே– புய**
**வீக்கத்திலே உயர் நோக்கத்திலே**
**காக்கத் திறல்கொண்ட**
**மல்லர் தம்சேனைக்**
**கடலினிலே உயர்நாடு“**

என்று பாரத மாதாவிற்கும், தன் தாய் நாட்டிற்கும் கவி கொட்டிய பாரதி உதிர மல்லவா ? நம் இலங்கை திருநாட்டின் புகழை பாரதியின் கொள்ளுப்பெயரன் பாடித் தருவது இன்பவரமல்லவா என எண்ணினேன். பணி தொடர்ந்தோம்.

வர்ணம் என்பது நடனக் கச்சேரியின் உயிர் போன்றது . அவ்வுருப்படியில் நம்



உயிர் நாட்டின் பெருமைகளைச் சொல்வது மிகப் பொருத்தமாகவும் இருந்தது. இந்த உருப்படி அமைப்பில் பாடலோடு ஜதிகளும் அமையும். முதலாவது ஜதி மூன்று காலத்தில் அமைவது வழக்கம். நம் தாய் நாட்டுக்கு காலந்தோறும் வழங்கப்பட்ட பெயர்களை வரிசைப்படுத்தி புத்தாக்கமாக இந்த ஜதியினை அமைத்தோம்.

பல்லவியும் திரிகால ஜதியும் புதுவித வேகத்தை உள்ளத்தில் விதைத்தது கண்டு , அடுத்த வரி என்ன வேண்டும் பட்டு என்று கேட்டார் பாரதி ஐயா .

சாஸ்திரமும், மருத்துவமும், இசையும், பெரும் படையும் என ராஜ்ஜியம் நடத்திய ராவணன் நம் அடையாளம் அல்லவா. விசுவகர்மாவால் குபேரனுக்காக அமைக்கப் பட்ட லங்கா என்ற ராச்சியம் அவன் தம்பி ராவணனால் கைப்பற்றப்பட்டது எனக் கூறி தசமாமுகனின் புகழ் பாட ஆரம்பித்தேன். “தசக்ரீவன் “ என்ற நாட்டிய நாடகத்தை பல்லாண்டுகளுக்கு முன் உருவாக்கும் போது ஏற்பட்ட ராவணக் காதலை எண்ணி சில நொடிகள் தொலைவதற்குள் ,

**“ புயம் ஆர் கொற்றவன் சோதரன்**
**குபேரன் தன்னுடை ராஜ்ஜியம் தான்**
**பறித்தாண்டான்**
**மயல் விழியால் குழலி**
**தனை மணந்தான்**
**விற்பனன் பண்டிதன் சிவனருள்**
**தொண்டன் ராவணன் “**

என காம்போதியில் பாடியும் முடித்துவிட்டார் பாரதி ஐயா.

திடமாவுறைகிறான் திருக்கேதீச்சரத்தான் நாட்டிய நாடகத்தை தயாரித்து வழங்கும் போது நம் நாட்டின் புராணோத்தமத்தினை உணரும் பாக்கியம் கிடைத்தது. இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களையும், அருணகிரி மொழி வந்த கதிர்காம ஸ்தலத்தையும் உலகறியும். இதுவே இவ்வர்ணத்தின் அனுபல்லவியாக அமைந்தது.

அத்தோடு புத்த நெறியின் புனிதம் பரவிய நாடு என்பதையும் அனுபல்லவியில் சண்முகப்ரியா, வகுளாபரணம் ராகங்களில் அமைத்தார்.

நயமும் , நகைப்பும், நாகரிகமும் நலமும் நிறைவும் நிகழ்ந்த நாடாக இருந்த புண்ணிய பூமியில் ஏற்பட்ட பேதமும் பிளவும், பகைமையும், துயரமும், அழிவும், யுத்தமும் இவ்வர்ணத்தின் நடுப்பகுதியான முத்தாயீஸ்வரத்தில் மிக அற்புதமாக இசையமைத்தார். வியந்திருந்தேன். கனத்தது இதயம்.

ஓவியம், காவியம், தமிழர்களின் கூத்துக்கலை , மலைகள், தேயிலைத் தோட்டம் , நீர்வீழ்ச்சி , ரத்தினக்கல், கடல், துறைமுகம், களிமண், செம்மண், ஆறுகள் எனக் குவிந்திடும் கோடி வளங்களை சரணப் பகுதியில் சிட்டையிட்டு வழங்கினார்.

சுத்தசாவேரி, மலையமாருதம், காபி என சரமாரியாக வந்து நனைத்த இசையில் தோய்ந்திருந்த வேளை , ஆஹா என்றொரு குரல் கேட்டது. நாட்டின் பெருமையைப் பாடும் போது உணர்வூறி உயிரிசை வழங்கி தானே ரசித்துக்கொண்டிருந்தார். மீண்டும் சொல்கிறேன், பாரதி உதிரமல்லவா ?

நாட்டின் வளங்களையும், வரலாற்றினையும், நடந்த செய்திகளையும் மட்டும் சொன்னால் போதுமா ? இந்த வளங்களை பேணிக்காத்திட , எதிர் கால சந்ததிக்கு விட்டுச் செல்ல , ஒரு நாடு வான் புகழ் பெற , இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லவேண்டாமா? என்று அவரே கேட்டு விட்டு வர்ணத்தின் நிறைவினை எழுதினார்.

**“ ஆஹா என்ன வரங்கள்? என்ன**
**பெருமைகள் ? மிளிர்கின்ற உயிர் நாடு**
**மங்கா புகழும் நீங்கா சிறப்பும்**
**நிலைத்தே நிலவிடும் இனிய நாடு**
**ஒன்றாய் முடிவெடுப்போம் , நன்றாய்**
**இனி நடப்போம்,**
**நின்றே இதை முடிப்போம், பேதம்**
**இனியில்லை என்போமே ,**
**நாட்டு நலம் வீட்டு நலம் பேணுவோமே**
**எங்கள் நாடு என்றே போற்றி**
**வாழ்வோமே !**
**எங்கள் நாடு லங்காபுரி என்போமே ! “**

ஹமீர் ராகத்தில் இவ்வரிகளை பாடினார். நல்லதொரு நாட்டினின் பெருமையைப் பாட அற்புதமான இசையை இப்படைப்பு அருளியதென எண்ணி நிறைவு கொண்ட அவரது கண்களைக் கண்டேன். என் விழிநீர் வழிந்தது.

இந்த உருப்படியை 2022 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அமைத்தோம். அந்தக் கால கட்டத்தில் நம் நாடு இருந்த நிலையினை நாம் மறந்தாலும் சரித்திரம் மறக்காது. நம் தாய் நாட்டின் சிறப்பினை உலகறியச் செய்வது நம் கடன் !

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

EST: 2014

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK



AJ ENTERTAINMENT
tamil.de
portal • lifestyle • entertainment
EPIC MONKEYS
Lankasri
IBC தமிழ்
Cineulagam
தமிழ்வின்
GET TICKETS NOW!
இளையராஜா
80
KARTHIK
SHWETA MOHAN
MANO
SP CHARAN
MADHU BALAKRISHNAN
ARUNMOZHI NAPOLEON
OBERHAUSEN 01.JULY -5PM
RUDOLF WEBER ARENA



# ஆகாயம் இல்லா நிலவுகள்

## சர்வதேச விதவைகள் தினம் ஜூன் 23

“விதவை“ என்பது வடமொழிச் சொல் தமிழ்மொழியில் “கைம்பெண்“ என்று எழுதினால் ஒன்றுக்கு இரண்டு பொட்டு வைக்கலாம். தமிழ் வஞ்சிக் காது வாழ வைக்கும்“

இது கலைஞர் கருணாநிதியின் கூற்று. ஆனால் சொல்லில் வைக்கப்படும் பொட்டு விதவைகளின் வாழ்வை மலர வைக்குமா என்றால் இல்லை என்பதே இன்றும் பதிலாக உள்ளது.

விதவை என்னும் சொல்லைக் கேட்கும் போதெல்லாம் ஒரு பெண்மணி ஞாபகத்தில் வருவார். பால் போல வெள்ளை நிறம். மங்கலம் பொங்கும் மென்னகை பூத்த முகம். ஆனால் அந்த முகத்தில் குங்குமம் இல்லை. கண்களின் ஆழத்தில் கவலைகள் ஏதும் ஒளிந்து இருக்கின்றனவா என்று நான் கவனிப்பதுண்டு. காணாது ஒளிக்கும் கலையில் அவர் வல்லவர்.

அவரது கணவர் சிங்களப் பிரதேசத்தில் புகையிரத நிலைய அதிபராக இருந்த போது ,1958 ம் ஆண்டு இனக்கலவரத்தில் அடித்துக் கொல்லப்பட்டதாக அறிந்தேன். திருமணமாகி தனது முதலாவது குழந்தையை அப்போது கருவில் சுமந்திருந்தாராம். அவரது மனநிலையும் வாழ்வும் எவ்வாறு இருந்திருக்கும், தன் பெண்குழந்தையை ஒழுங்காக வளர்க்க எத்தனை துயரங்களைச் சுமந்திருப்பார். தன் குழந்தையின் மகிழ்ச்சிக்காக தன் கவலைகளை மறைத்திருப்பார். உணர்வுகளை உறைநிலையில் வைத்திருந்து இருப்பார் என்று எண்ணிப் பார்த்து மனம் கலங்கியதுண்டு.

அதன் பின்னரான இலங்கையின் வரலாறு உற்பத்தியில் தன்னிறைவை அடையாத போதும், அண்மைய மூன்று நான்கு தசாப்தங்களாகத் தொடர்ந்த இனவன்முறை, யுத்தம் என்பவற்றின் மூலம் பல்லாயிரக் கணக்கான விதவைகளை வடக்கிலும் தெற்கிலும் உற்பத்தியாக்கி சாதனை படைத்துள்ளது.



2009 இறுதி யுத்தத்தின் பின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் 89000 தமிழ்ப் பெண்கள் விதவைகளாக இருந்தனர் என்கிறது, 2010-ம் ஆண்டின் புள்ளி விபரம். அதில் 12,000 பேர் நாற்பது வயதுக்கு உட்பட்டவர்கள் 8000 பேர் குறைந்தது மூன்று பிள்ளைகளை உடையவர்கள் என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன.

(தேடலில் மாறுபட்ட தரவுகளும் கிடைக்கின்றன).



அது போலவே பெரும்பான்மை இனத்திலிருந்தும் இராணுவத்தினரின் மனைவிமார்கள் அதிகளவில் விதவைகளாகி உள்ளனர்.

உலகெங்கினும் 250 மில்லியனுக்கும் அதிகமான விதவைகள் உள்ளனர். மொத்த விதவைகளில் மூன்றில் ஒரு பங்கினர் சீனா மற்றும் இந்தியாவில் வாழ்கின்றனர் ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் வாழும் விதவைகள் அதிக வன்முறைகளையும் பாரபட்சங்களையும் சந்திக்கின்றனர் விதவைகளில் பத்தில் ஒருவர் அதீத வறுமையில் வாடுகின்றனர் எனவும் அறியக் கிடைக்கிறது.

எனினும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் விதவைகள் பொருளாதார மற்றும் கலாசார நிலைமைகள் சார்ந்து தனிமை அடைவதில்லை.

வளர்முக நாடுகளில் வாழும் விதவைகள் வறுமை, உடல்உள ரீதியான வன்முறை, சமுக இழிவு பாரபட்சம் மற்றும் மருத்துவரீதியான பல பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர்.

இவர்களுடைய நிலைமைக்கு முக்கிய காரணங்களாக வேலையின்மை, கல்வி மற்றும் பொருளாதார பலமின்மை ஓய்வூதியம் , அரச உதவிகள் மற்றும் முன்னேற்றத் திட்டங்களை அடையும் வழி அறியாமை, பரம்பரைச் சொத்துகளை உரிமை கோரும் சட்டங்களை அறிந்திராமை மற்றும் உறவினரின் பாராமுகம் என்பன முக்கிய காரணங்கள் ஆகின்றன.

வேலை அல்லது நிவாரண உதவிகள் நாடிச் செல்கையில் பாலியல் லஞ்சம் கோரும் மனச்சாட்சியைத் தொலைத்த மனிதர்களும் உண்டு.

பலர் மத்தியகிழக்கு நாடுகளிலோ அன்றி தாயகத்திலோ குறைந்த வேதனத்தில் அதிக உழைப்பினைக் கொடுக்கும் நிலையில் அல்லல் படுகின்றனர்.

கணவனை இழந்த மனவலியுடன் ஏனைய பிரச்சனைகளின் தாக்கம் ஆகியவற்றால் பலர் உடல் உளநலப் பாதிப் புகளுக்கு உள்ளாகின்றனர். வேறு வழியின்றி விபச்சாரம், தற்கொலை எனும் முடிவுகளை நாடுவோரும் உள்ளனர். கல்வியில் பின்தங்கும் இவர்களுடைய குழந்தைகள் எதிர்காலத்தில் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடவும் அதிக வாய்ப்புகள் உள்ளன.



ரஞ்ஜனி சுப்ரமணியம் (இலங்கை)

விதவைகளின் நிலை பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஆண்டு தோறும் ஜுன் மாதம்

30 ஆம் பக்கம் பார்க்க...






# நெஞ்சமெலாம் நிறைந்த கொழும்பு கம்பன் கழகத்து
# நிருத்த உற்சவம் 2023

நல வாழ்வில் மன மேம்பாட்டை வழங்கி உள ஆரோக்கியத்தை நிலைத்திருக்கச் செய்யும் ஆற்றல் கலைகளுக்கு இருந்தாலும் பரதமானது அதிலுமொரு படி மேலாக நடனமாடுபவரை மட்டுமன்றி பார்ப்பவர்களுக்கும் பலமடங்கான மனவளச் சக்தியை வழங்கும். “அபிநய தர்ப்பணத்தில்“ “நாட்டியக்கலையானது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பயனையும் வழங்குகிறது“ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது



இத்தகு சிறப்புகள் பொதிந்ததாய் பரதத்தின் மூலம் நல வாழ்விற்கான மேம்பாட்டை வழங்கும் பெருங் கைங்கரியத்தை கொழும்பு கம்பன் கழகத்தார் கடந்த 04-05-2023 தொடக்கம் 07-05-2023 வரையான நான்கு நாட்களும் நன்கு வழங்கியிருந்தனர்“ நிருத்தோற்சவம் “என்ற நல்லதாம் நாமந்தனில் ஆடல் ஆகுதி ஒன்றை கலை வேகத் தமிழ்த் தாகம் விடாயடங்க குடித்த திருப்தி போல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆற்றுகையாய் வளர்த்தனர் கொழும்பு கம்பன் கழகத்தார். அகில இலங்கை கம்பன் கழக நிறுவுனரான போற்றுதற்குரிய கம்பவாரதி இ.ஜெயராஜ் ஐயா அவர்களின் அர்ப்பணிப்பான கைங்கரியங்களின் பேறாக இந்த நிருத்தோற்சவம் நடைபெற்றமையே அதன் சிறப்பிற்கு அணி செய்யும் காரணமாகும்

04-05-2023 ம் தினம் நிருத்தோற்சவ முதலாம் நாள் நிகழ்ச்சி ஆரம்பமானது. நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலரும் தொழிலதிபருமான திரு. மு.ஸ்ரீ காந்தா அவர்கள் தம்பதி சொரூபமாக மங்கல விளக்கேற்றி வைக்க செல்வி. அம்ரிதா கேதீஸ்வரன் கடவுள் வாழ்த்திசைக்க கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவர் மாண்புமிகு ஜெ. விஸ்வநாதன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள்.

நிருத்தோற்சவத்தில் கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவர்களின் “சகுந்தலை“ நாட்டிய நாடகம் இனிதே



ஆற்றுகை செய்யப்பட்டது. பரத கலா வித்தகர் ஸ்ரீ மதி ஷாலினி வாகீஸ்வரன் அவர்களின் நட்டுவாங்கத்தில் மிகவும் தத்துரூபமாக சகுந்தலையின் பிறப்பினை பாடசாலை மாணவியர் அழகாக சித்தரித்திருந்தனர். நாட்டிய நாடகத்திற்கான இசையைகுரல் வழியாக திருமதி நிவாஷினி சக்திவேல், திருமதி தாரணி ராஜ்குமார் வழங்கியிருந்தனர். அதனைத்தொடர்ந்து நாட்டியக்கலைமணி ஸ்ரீமதி தயானந்தி விமலச்சந்திரன் அவர்களின் நர்த்தன நிர்ணயா நாட்டியப்பள்ளி மாணவர்கள் வழங்கிய “ஆடல் ஆகுதி“ இடம்பெற்றது. இதற்கான இசைவடிவத்தை திரு அ. ஆரூரன் அவர்கள் வழங்கியிருந்தார்.

05-05-2023 இரண்டாம் நாள் நிருத்தோற்சவத்தில் கொழும்பு இந்து மகளிர் மன்றத்தின் போஷகர் திருமதி யமுனா கணேசலிங்கம் அவர்கள் மங்கல விளக்கேற்றி வைக்க திருமதி நிவாஷினி சக்திவேல் கடவுள் வாழ்த்திசைக்க சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பு.ஆதவன் அவர்கள் தலைமையுரை ஆற்றி ஆரம்பித்து வைத்தார்கள். நர்த்தன கலைமணி ஸ்ரீ மதி லக்ஷ்மி ஸ்ரீகரன் அவர்களின் நெறியாள்கையில் நுண்கலைக்கோயில் மாணவர்களின் பரத ஆற்றுகை “சமகம்“ மிகச்சிறப்பாக அறுவடை செய்யப்பட்டது பின்னணிக் குரலாக திரு. வை. கணேசலிங்கம் அவர்கள் இசைத்திருந்தார்கள் சமகத்தில் திழைத்த பார்வையாளர்கள் பரதச் சுவையிலே தோய்ந்திருந்தனர் என்பதை சபையிலே பார்க்க முடிந்தது. தொடர்ந்து நாட்டியபூரண கலாநிதி ஸ்ரீமதி நிர்மலா ஜோன் அவர்களின் நிர்மலாஞ்சலி பரத நாட்டிய கலையக மாணவர்கள் “சப்த சுவர பரதம்“ ஆடல்தனை அரங்கேற்றினர். ஆடலசைவுகளிற்கு திரு அ. ஆரூரன் அவர்கள் குரலிசை வழங்கினார்.

06-05-2023 மூன்றாம் நாள் நிருத்தோற்சவத்திலே சட்டத்தரணி திருமதி ஜெயந்தி வினோதன் அவர்கள் மங்கல விளக்கேற்றி வைக்க செல்வி தில்ஷா கிருஷ்ணகுமார் கடவுள் வாழ்த்திசைக்க மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்

**கலைஞானச்சுடர்**
**ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன்**
**(இயக்குநர் தேஜஸ்வராலயா கலைக்கூடம் கொழும்பு)**

மாண்புமிகு சசி மகேந்திரன் அவர்கள் தலைமையுரைதனை அழகு செய்து ஆரம்பித்து வைத்தனர்

“ஞானம் ஓர் வடிவாகி“ என்ற பரத ஆற்றுகையை கலாசூரி திவ்யா சுஜேன் அவர்களின் அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவர்கள் ஆடலை அழகு செய்தனர். அசைவுகளுக்கான இசையை ஒலியாக ஓங்கச் செய்தார் செல்வி வைஷாலி யோகராஜன்.

தொடர்ந்து கலைமாணி ஸ்ரீ மதி சிவானந்தி ஹரிதர்சன் அவர்களது நிர்த்தனா நடனப்பள்ளி மாணவர்கள்

17 ஆம் பக்கம் பார்க்க...









# நெஞ்சமெலாம் நிறைந்த கொழும்பு கம்பன் கழகத்து
# நிருத்த உற்சவம் 2023







வழங்கிய “நர்த்தன சங்கமம் “ ஆடலானது அழகாக மரபுகளை தமதாக்கிய வடிவ நிலையிலேயே மேடை யேற்றப்பட்டது இவ் எழிலான நடனத்திற்கு குரலிசையை திரு அ.ஆரூரன் வழங்கியிருந்தார்

07-05-2023 நிருதோற்சவத்தின் நிறைவு நாள் நீர் கொழும்பு இந்து இளைஞர் மன்ற தலைவர் திரு. பொ. ஜெயராமன் தம்பதியினரும் மேற்படி மன்றத்தின் பொருளாளர் திரு. மு. ஏகாம்பரம் தம்பதியினரும் இனிதே பெரிதுவிக்குமாறு மங்கல விளக்கேற்றி சிறப்பித்தனர். இன்னமுத கடவுள் வாழ்த்தை செல்வி. வைஷாலி யோகராஜன் இசைத்திருந்தார். தலைமையுரைதனை பேராசிரியர் அங்குரன் தத்தா – இயக்குனர், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு அவர்கள் ஆரம்பம் செய்து வைத்தார். நிருதோற்சவ காலங்களிலே நடன ஆற்றுகைகளை வழங்கிச் சிறப்பித்த



ஆசிரியர்களை கௌரவித்து பாராட்டுக்களை வழங்கியிருந்தது கொழும்பு கம்பன் கழகம்

நிறைவு நாளான நிருத்த உற்சவத்திலே தண்டமிழ் தாய் தவயோக மெய்ஞ்ஞான திருவரங்காக நான்குநாட்களும் தோய்ந்த கலைச்சுகானுபவத்திலே அரங்கு மூழ்கிக் கிடந்தது. சங்கத்தமிழர் சால்பிலே காதலும் போரும் எங்ஙனமான பாடுபொருளாக



இருந்ததுவோ அதுவாகவும் அதற்கும ப்பால் பக்திச்சுவைததும்ப மீனாட்சி திருக் கல்யாணம் வரை நிறைவுதந்து நிறைத்தெம் மனங்களெல்லாம் திருப்தியை வழங்கியது. கம்பன்கழக ஆடல்அரங்கெனலாம்.““தமிழ் இனியது““ என்ற நாட்டியநாடகத்தினை நாட்டியக்கலைமணி ஸ்ரீமதி பவானி குகப்பிரியா அவர்களுடைய தியாகராஜர் கலைக் கோயில் மாணவர்கள் வழங்கியிருந்தார்கள்.

நிறைவாக “:மீனாட்சி திருக்கல்யாண “ நாட்டியநாடகத்தினை நாட்டியகலா மந்திர் கலாசூரி ஆச்சார்யா கலாசாகர ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களுடைய நெறியாள்கையில் அற்புதமாக படைத்திருந்தார். அணிசெய் கலைஞர்களின் பங்கு அபரிமிதமானது. அற்புதமான இசையுடனும் அழகொளிரும் ஆடலுடனும் தத்ரூப நாடகவெளிப்பாட்டிலும் ஏன் முத்தமிழிலும் தோய நிருத்தோற்சவம் இனிதே நடந்தேறியது. பலரின் உழைப்புகள் இங்கே ஒருகுடைக்கீழ் கம்பதேசத்து கலையரங்காகியது. அதை ஆக்கிய கொழும்பு கம்பன் கழக நிறுவுனர் போற்றற்கினிய கம்பவாரிதி ஐயா அவர்களை வாழ்த்தி இதுபோல இன்னும் பலநூறு நிருத்தோற்சவங்களை ஆற்ற வேண்டிப்பணிகிறோம்.


## வெற்றிமணி திருமண சேவை



நன்கு படித்த, Master முடித்த யோ்மனியில் Bonn நகரில் வேலை செய்யும் 1993 ஆம் ஆண்டு பிறந்த சைவ வேளாளர் பெண்ணுக்கு (உயரம் 171 cm) சிறந்த மணமகன் தேவை Nordrhein-Westfalen மாநிலத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
அமரன் 01731833664




யோ்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக்கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்.
4915774318528

Wirtschaftsingenieur ஆக Frankfurt நகரில் வேலை செய்யும் 34 வயதுடைய சைவ வேளாளர் பெண்ணுக்கு தற்போதைய இடத்தில் வேலை தொடரக்கூடிய பட்டதாரி மணமனை எதிர்பாக்கின்றோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்: 4915774318528


PALAZIO
EVENTLOCATION
உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களுக்கும்,
மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற,
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் ஓர் அழகிய மண்டபம்!
450 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய
வசதியுடனும் கூடியது!
மேலும் எம்மிடம்....
★ போட்டோ மற்றும் வீடியோ
PALAZIO_EVENTLOCATION
+ (49) 1525 3961138
PALAZIO EVENTLOCATION
Kasinostr. 25 | 42103 | Wuppertal | apollogastrogmbh@gmail.com



## கிழக்கிலங்கையில்

# மனதை மயக்கும் பாசிக்குடா கடற்கரை

**மீன்** பாடும் தேன் நாடு என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பில் சுற்றிப் பார்ப்பதற்கு பல இடங்கள் உள்ளன. அதில் மிக முக்கியமானது பாசிக்குடா கடற்கரை. இது மட்டகளப்பிற்கு வடக்கே 34 ஓட் தூரத்தில் அமைந்துள்ளது. இது ஆழமற்ற ஒரு சுறுசுறுப்பான கடற்கரை ஆகும். மட்டக்களப்பு கலங்கரை விளக்கு இது 1913 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

கல்லடி பாலத்திலிருந்து (லேடி மன்னிங் பாலம்) சப்தமற்ற இரவு நேர முழுமதி தினங்களில் அவதானிக்கும் போது ஓர் இன்னிசை கேட்பதாகக் கூறப்படுகிறது. இது ஊரிகளினுள் நீர் புகுந்தெழுவதால் ஏற்படும் இசையென நம்பப்படுகின்றது. இதனை இலக்கியங்களில் ‘நீரரமகளீர் இசைக்கும் இசை’ என வர்ணிக்கப்படுகிறது. ஆயினும் மீன்கள் தான் இசையெழுப்பின என்ற கருத்தும் பிரதேசவாசிகளிடம் காணப்படுகிறது. இதன் காரணமாக மட்டக்களப்பு ‘மீன் பாடும் தேன் நாடு’ எனப் பன்னெடுங் காலமாக அழைக்கப்படுகின்றது.

இது ஒரு அழகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறிய கிராமத்தில் அமைந்துள்ளது.இது ஒரு கடலோர சுற்றுலா துறைக்குரிய நகரம் ஆகும். இதற்கு அருகில் உள்ள கல்குடா இணைந்து பாசிக்குடா ஆனது. 2004 ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய இயற்கை அணர்த்தமாகிய சுனாமி மற்றும் உள்நாட்டு போர் போன்ற பெரும் ஆபத்துக்கள் ஏற்பட்டது. ஆனாலும் இப்பொது இக் கடற்கரையானது மிகவும் அழகான முறையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பிரபலமான





புனிதப்ரியா
பன்னீர்செல்வம்
(இலங்கை)

சுற்றுலா தளமாக காணப்படுகின்றது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மண்முனை மேற்கு பகுதியில் இயற்கை அழகுடன் மனதை கவரும் விதத்தில் பாசிக்குடா அமைந்துள்ளது.

பாசிக்குடா கடற்துறை ஆனது இலங்கையின் முதலீட்டிலும் அதிகளவு பங்கு வகிக்கின்றது. அத்துடன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் சமீபத்தில் மிகையாக அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா துறை அமைச்சு தகவல் வெளியுட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பசிக்குடாவில் பிரபல்யமான மாரியம்மன் கோவில் ஒன்றும் அமைந்துள்ளது. இது மட்டக்களப்பு , திருகோணமலை வீதியின் நடுவே அமைந்துள்ளது.

பாசிக்குடாவின் அருகில் அமைந்துள்ள மட்டக்களப்பு விமான நிலையமானது கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து பிரிந்த ஒரு சிறிய விமான நிலையமாகும்.

அலைகளின் அகோரமில்லாத, ஆழமில்லாத விசாலமான கடற்பரப்பு, முருகைக்கற்பாறைகள், கடற் தாவரங்கள், கடல் வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் இயற்கை வனப்பும், உல்லாச விடுதிகளும், கிடுகுகளால் அழகுற,நேர்த்தியாக வேயப்பட்ட கபாணா என்றழைக்கப்படும் உல்லாச விடுதிகளும், படகுச் சவாரிக்கு ஏற்ற கடலும், பாசிக்குடாவின் சிறப்புக்களாகும்.

### பாசிக்குடா சுற்றுலா விடுதிகள்

இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் விதத்தில் பல சுற்றுலா விடுதிகள் காணப்படுகின்றன. இங்கு சகலவிதமான நட்ச்சத்திர விடுதிகளும் உள்ளன. இந்த விடுதிகளில் free WIFI , swimming pool போன்ற வசதிகளும் காணப்படுகின்றன.

குறிப்பாக 2009 ம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் சுனாமி மறுவாழ்வு மற்றும் புணர்நிர்மான திட்



டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மக்களினது மனம் கவர்ந்த சுற்றுலா தளமாக மாறிவிட்டது. பாசிக்குடா உலகின் ஆழமான கடற்கரையில் ஒன்றாகும். இக் கடலானது இலங்கை கடலோர பகுதியுடன் ஒப்பிடுகையில் மிகவும் ஆழம் குறைந்த கடற்கரையாகவே காணப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் இங்கு அதிகளவில் முதலீடுகளை இடுகின்றனர். இது ஒரு முதலீட்டு மையமாகவும் காணப்படுவதே இதற்கு காரணமாகும்.

பாசிக்குடா (Pasikudah) என்பது மட்டக்களப்பிலிருந்து 35 கி.மி. தொலைவில் வட மேற்கில் அமைந்துள்ள ஓர் கரையோர பிரதேசமாகும். வாழைச்சேனை பிரதேசத்திற்கு உட்பட்ட இவ்விடம்



இலங்கையின் மிகவும் அழகான கடற்கரைகளுள் ஒன்று ஆகும். புகழ்பெற்ற உல்லாச பயணிகளைக் கவரும் இடமாக இருந்த இது ஈழப் போர் இடம் பெற்றதனால் இதன் உல்லாச பயணிகளை இழந்தது. 2004 இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் மேலும் நிலைமையை மோசமாக்கியது. ஈழப் போர் முடிவுற்றதும் இப்பகுதி உல்லாச பயணிகளை உள்வாங்கும் இடமாக மாறி வருகின்றது.

அலைகளின் அகோரமில்லாத, ஆழமில்லாத விசாலமான கடற்பரப்பு, முருகைக்கற்பாறைகள், கடற் தாவரங்கள், கடல் வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் இயற்கை வனப்பும், உல்லாச விடுதிகளும், கிடுகுகளால் அழகுற,நேர்த்தியாக வேயப்பட்ட கபாணா என்றழைக்கப்படும் உல்லாச விடுதிகளும், படகுச் சவாரிக்கு ஏற்ற கடலும், பாசிக்குடாவின் சிறப்புக்களாகும்.

பாசிக்குடாவானது ஏராளமான ஆடம்பர ஹோட்டல்கள் மற்றும் ஆழமற்ற கடற்கரை கொண்ட பரபரப்பான

28 ஆம் பக்கம் பார்க்க...

முற்றிலும் இலவசமான சேவை!

## விழிப்புணர்வு தியானப் பயிற்சி



விழிப்புணர்வு தியானப் பயிற்சி உங்களுக்குள் உள்ள
இறைத்தன்மையை உணர்ந்து கொள்ளவும்,
எப்படி மன அழுத்தத்திற்குள் போகாமல் இருப்பதற்கும்,
மன அழுத்தத்தில் இருந்து எப்படி வெளியேற்றுவதற்கான விழிப்புணர்வு பயிற்சி.

பின்குறிப்பு:
நேரமும், முற்பதிவும் முக்கியம்.
கட்டணம் : முற்றிலும் இலவசம்

ஜூன் : 11 ஞாயிறு,
ஜூலை : 14 வெள்ளி,
ஆகஸ்ட் : 13 ஞாயிறு
நேரம் : பி.ப.18 - பி.ப. 20

தமிழர் அரங்கம்
Rheinische Str. 76-80
44137 Dortmund

தொடர்புகளுக்கு: திருமதி. சபேசன் 0176 80 14 3338 தவம்: 0177 677 9017

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்தற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

காரணமில்லாமல் மனம் சிலரைத் தேடும். முன்னமே ஒட்டி உறவாடி விட்டுச் சென்றவர்களின் நினைவுகள் மனதுக்குள் தவியாய் தவித்து ஊசலாடும். இது உறவுக்கு மட்டுமா? இல்லை ஊருக்கும் தான் அது பொருந்தும். விழி சொல்லும் கதைகளை விட மனம் சொல்லும் கதைகள் உணர்வு பூர்வமாக இருக்கும். புலம்பெயர்ந்து பிறப்பில் இருந்தவர்களைத் தொலைத்து யாரோ ஊர் பேர் தெரியாத மனிதர்கள் எல்லாம் எம்மோடு ஒட்டி உறவாடுகின்ற போது ஏதோ கனவுகள் போல பழைய ஊர் ஞாபகங்கள் நிழலாடிக் கொண்டேயிருக்கும். இது வெளியில் தெரியாது மனதுக்குள் இருக்கும் ஒரு ஏக்கம். இது அனைவருக்கும் தான் இருக்கின்றது. இந்த மனநோய் இல்லாத புலம்பெயர்ந்த மக்கள் யாருமேயில்லை. கடமைக்காகவும் இருப்பை வலுப்படுத்தவும் ஓடிஓடி உழைத்து ஓய்ந்த பின் தவிப்புக்கு மருந்து தேடப் பிறந்தகம் நோக்கிப் பறக்கின்றவர்கள் அங்கு எதிர்பார்ப்பதெல்லாம் அன்பு, பாசம், அமைதி, அந்தப் பிள்ளைப் பிராயத்து நினைவுகளை மட்டுடே. வானத்தில் பறந்து சென்று மகிழ்ச்சி கண்டாலும் திரும்பவும் வானத்தில் பறந்து திரும்பவும் வாழும் நாட்டில் கால் பதிக்கவே வேண்டும்.




கௌசி (யேர்மனி)

# விழி சொல்லும் கதைகளை விட மனம் சொல்லும் கதைகள் உணர்வு பூர்வமாக இருக்கும்



என்னுடைய என்னையே நானறியேன் என்னும் நாவலிலே முக்கிய கதாபாத்திரம் பேசுவதை இங்கு பதிவு செய்கின்றேன்

அந்தக் காற்றைச் சுவாசிப்பேன். என் தாய் மணலில் புரண்டு எழுவேன், அந்தச் சூரியனின் கதிர்களை என் வெற்று உடம்பினால் உடைப்பேன். கால்களால் இலங்கை மண்ணைத் தட்டித்தட்டி ஒத்தடம் கொடுப்பேன், உறவினர் மனதுக்குள் நுழைந்து திரும்புவேன், தியேட்டருக்குள் சென்று சினிமா பார்த்து மூட்டைப்பூச்சிகளுக்கு இரத்ததானம் வழங்குவேன், பள்ளிவாசலிலே நாரிசாசோறு உண்பேன், பொடிமெனிக்கா வீட்டில் பாற்சோறும் கட்டச்சம்பலும் உண்பேன், விகாரையிலே தாமரைப்பூ வைத்து வணங்குவேன், கோயில் குளத திலே மூழ்கி எழுவேன், சின்னத்தம்பிப் படத்து பிரபுபோல் ஏரியிலே குளிப்பேன், அநாதைப்பிள்ளைகளைப் பார்த்து நம்பிக்கை விதைத்து வருவேன், மாமரநிழலிலே ஆறுதலாய் அமர்ந்திருந்து கறுத்தக் கொழும்பான் மாம்பழம் கடித்துத் தின்பேன், பழஞ்சோற்றுக் கஞ்சியிலே ஊறுகாய் சேர்த்தெடுத்து வாசற்கட்டிலே அமர்ந்து காற்று வாங்கிகஞ்சிகுடிப்பேன். இப்படிஎத்தனையோ ஆசைகள் எனக்குள்ளே இருக்கின்றன. என்று அவர் சொல்வதாக எழுதியிருக்கிறேன்.

ஏறாவூரிலே நான் வாழந்த அந்தத் தெரு. நடக்கப் பழக்க மில்லாமல் ஓடியே சென்ற சாலை ஓரங்கள்

சதங்களை எண்ணிக் கொடுத்து முந்திரியம் பருப்புக்கள் வாங்கிய போது முந்திரிப் பால் சுட்டுக் கறுத்த விரல்களால் பெட்டியைத் திறந்து உம்மா எண்ணிக் கையில் புதைத்த பருப்பை வாயில் போட்டபடி மீண்டும் ஓடிய நினைவுகள். என்னுடைய ஐயாவின் காலைப் பிடித்தால் காலுக்கு மேல் ஏறி நடந்தால் 50 சதம் கிடைக்கும். அந்தச் சதங்களை முன் கடையில் போத்தலுக்குள் இருக்கும் முட்டாசு வாங்கி சுவைத்த காலங்கள் ஊர் நினைவுகளை மீட்டுகின்றன. நாம் கடந்து போன காலங்களில் மறந்து போனவை அதிகம். சிட்டுக்குருவிகளாக பறந்த அந்த நாட்கள் நினைவுக்குள்ளே நிழலாடுகின்றன

பொப்பிசைச் சக்கரவர்த்தி A.E.மனோகரன் பாடிய பாடலொன்றில்

**கோணேஸ்வரர் கோயில்**
**கொண்ட திருமலையூரில்**
**இராவணேசன்**
**ஞாபகமும் வருகுது அங்கே**
**கன்னியா வெந்நீர் ஊற்றும்**
**கலங்கரை ஒளி விளங்கும்**
**இயற்கை துறைமுகந்தானே**

என்று பாட அந்தக் கன்னியா வெந்நீர் ஊற்றிலே உள்ள வெப்பத்தின் தன்மையைச் சின்னத்தம்பிப் புலவர் விளக்கும் போது

**காதலனைப் பிரிந்தவளின்**
**மனம்போல ஒன்று**
**கவிபாடிப் பரிசுபெறான்**
**மனம்போல ஒன்று**
**தீதுபுழி கேட்டவன்தன்**
**மனம்போல ஒன்று**
**செய்தபிழைக் கழுங்குமவன்**
**மனம்போல ஒன்று**
**நீதிபெற வேழைதுயர்**
**மனம்போல ஒன்று**
**நிறைபுழித்த கற்புடையாள்**
**மனம்போல ஒன்று**
**காதுமழுக் காறுடையான்**
**மனம்போல ஒன்று**
**கனலேறு மெழுநீர்கள்**
**உண்டுகன்னி யாயில்.**
**வெந்நீர் ஸ்நானம் ஆயிற்று.**

என்று பாடியுள்ளார். மேலும் சோமசுந்தரப்புலவர் இலங்கை வரலாற்றிலே

**“மஞ்சளாவிய மாடங்கள் தோறும்**
**மயில்கள்போல் மடவார்கணஞ் சூழும்**
**அஞ்ச ரோருரக பள்ளியின் மீமிசை**
**அன்ன வன்னக் குழாம் விளையாடும்**
**துஞ்சு மேதி சுறாக்களை சீறச்**
**சுறாக்களோடிப் பலாக்கனி கீறி**
**இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய் விழும்**
**ஈழ மண்டல நாடெங்கள் நாடே“**

என்று இலங்கை வளத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வாறு எண்ண எண்ண இனிக்கின்ற சொல்லச் சொல்லச் சுவைக்கின்ற இலங்கையின் சிறப்பினை சொல்வதற்கு இக்கட்டுரை போதாது.

இலங்கை பூலோகம் படத்திலே ஒரு புள்ளி. ஆனாலும் அது சந்தித்த நிகழ்வகளோ பெரும் சாகரம். ரிஷி மூலம் நதி மூலம் பார்க்கக் கூடாது. இதன் குற்றவாளி சுற்றவாளி ஆராய்ந்து கணக்கில் வைக்க எமக்கு இருக்கும் காலங்களோ மிகக் குறைவு. வாழ்ந்து கழித்த நாட்களிலே மனதுக்குள் ஊஞ்சல் ஆடும் நினைவுகளை மனத்துக்குள் சிறை வைத்து, மனக்கண் கொண்டு நோக்குகின்றோம். மகிழ்ந்து இன்பம் அனுபவிப்போம்.

சொற்களை அடுக்கி அடுக்கிக் கட்டி மேய்க்கும் எழுத்தாளனின் கனவுகளும் நினைவுகளும் சரித்திரமாகும்.








# நல்லாயிருக்க வேண்டிய நாடு நாசமாய் போனதேப்படி?

"என்ன வளம் இல்லை இந்த திரு நாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"?

என நீண்ட பல ஆண்டுகளாகவே பாடப் புத்தகங்கள் வாயிலாக பாடிக்கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் யதார்த்தம் அப்படியா இருக்கின்றது ? இலங்கை எனும் இந்த சிறிய நாடானது வளங்களால் ததும்பி வழிகின்றபோதிலும் அவற்றை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோமா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியில் மூலோபாய அமைவிடம் என்பது மிக முக்கியமானதொன்று . அந்த வகையில் எம்மிடம் கொழும்பு , திருகோணமலை, காலி, அம்பாந்தோட்டை போன்ற முக்கிய துறைமுகங்களும் சிறிய காங்கேசந்துறை துறைமுகமும் இருக்கின்றபோதிலும் நாம் அவை பற்றியெல்லாம் பேசுவதேயில்லை. இந்த துறைமுகங்கள் எமக்கான மிகச் சிறந்த சொத்துக்கள் என்பதை சிந்திப்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்கின்றோம் என்றால் மிகையில்லை.

தீவு நாடு என்றபோதிலும் பாறை மீனிலிருந்து சுறா மீன் குஞ்சி வரை இறக்குமதிசெய்துகொண்டிருப்பதோடு பொதிசெய்யப்பட்ட டின் மீன்களையும் வக்கணையாக நாட்டுக்குள் இறக்கிக்கொண்டிருக்கும் நம் உற்பத்திப்பண்பாட்டை என்னவென்பது? உலகிலேயே எமது தேநீரே மிகச் சிறந்ததாக காணப்பட்டது. எனினும் தற்போது அந்த இடத்தை வேறு நாடுகள் பிடித்துக்கொண்டன. ஒருகாலத்தில் அரிசியை ஏற்றுமதி செய்த நாடு இலங்கை !



**ஜேர்மனியின் உறுதியான தயாரிப்புகளான காகிதத் தொழிற்சாலையின் இயந்திரங்களின் நிலை என்ன?**



ஆனால் தற்போது பருப்பு வகைகளிலிருந்து அரிசி வரை அத்தனை அத்தியாவசிய உணவுப் பொருட்களையுமே இறக்குமதி செய்துகொண்டிருக்கின்றோம்.

நவீனமயமாக்கப்படாத விவசாயம் ஒருபுறம் என்றால் பட்டதாரியாகிய பின்னும் " அரசே வேலை கொடு " என பதாதைகளை ஏந்திய இலங்கையின் படித்த அறிவாளிச் சமூகம் மறுபுறம் .தாமே புதிதாக தொழில்களை உருவாக்கி வளமான சமூகத்தை கட்டியெழுப்பவேண்டும் என்கிற அடிப்படை அறிவற்ற கல்வி கட்டமைப்பு தொடர்வது நம் சாபக்கேடுதான் போலும் ! தாம் பிறந்து வளர்ந்த சொந்த நாட்டில் தொழில் தொடங்கினால் அல்லது முதலீடு செய்தால் அரச தரப்பினால் பின்னாளில் ஏதும் சிக்கல்கள் வரும் என பயந்து ஒதுங்கும் புலம்பெயர் சமூகம் இன்னொருபுறம். காணிகளின் பாதுகாப்பானது சட்டரீதியில் உறுதிப்படுத்தப்படாத நிலையில் அவர்கள் அஞ்சுவதும் நியாயம்தான் இல்லையா ?



**பிரியா இராமநாதன்**
(இலங்கை)

ஆடை கைத்தொழில் ஒருகாலத்தில் இலங்கையில் கொடி கட்டிப் பறந்தவொன்று . ஆனால் "கோட்டா " என்கிற பெயரில் அதையும் பறிகொடுத்துவிட்டோம் பங்களாதேஷிடம் . வெளிநாட்டு வேலை வாய்ப்பு ? அதிலும் ஏகப்பட்ட ஊழல்கள் சிக்கல்கள். நம் அரசியல்வாதிகளின் தான்தோன்றித்த தனத்தினால் வெளிநாட்டு வேலை வாப்புக்களைக்கூட மற்றைய வறுமைக் குறப்பட்ட நாடுகளிடம் இழந்து அந்தோ கதியானோம். நம் வங்கிகள் சுமக்கும் கடனை என்ன செய்வது? இ வை எல்லாம் கிடக்கட்டும் நான் ஆரம்பத்தில் சொன்னது போல் என்ன வளம் இல்லை இந்த திரு நாட்டில்? ஆம் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக திகழக்கூடியதல்லவா இலங்கை ? அதனை கட்டியெழுப்பலாமே? ஆம் கட்டியெழுப்பலாம்தான் அதற்கு புத்திசாலியான ஒரு சுற்றுலாத்துறை அமைச்சர் வேண்டுமே ?! கஞ்சா செடி வளர்ப்பது பற்றியும், நாட்டுக்குள் விபசார விடுதிகளை அதிகப்படுத்தவேண்டும் எனவும் கூறும் டயானா கமகே போன்றவர்கள் சுற்றுலாத்துறை ராஜாங்க அமைச்சராக இருக்கும் நாடல்லவா இது!

1965 ஆம் ஆண்டளவில் நடிகரும் தமிழக முதலமைச்சருமான ஆபுசு அவர்கள் இலங்கை வந்தபோது இங்கேயிருந்து கால்நடை வளர்ப்பு முறையினையும் அதன் பயனையும் கண்டு வியந்துபோனாராம் . ஆனால் அடுத்த பத்தே ஆண்டுகளில் ஏற்பட்ட திறந்த பொருளாதாரம் நம் உள்ளூர் கால்நடை வளர்ப்பிற்கு சங்கு ஊதி சாவு மணியடித்ததுடன் பால் மா பக்கற்றுக்களை கையோடு கொண்டுவந்து சேர்த்து. நாமும் நம் சொகுசுக்காக அதை வாங்கி இன்றுவரை அவற்றுக்கே அடிமையாகிப் போனோம். இந்த பாலின் நிலைதான் தற்போது உள்ளூர் கோழி வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்திக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை அல்லவா? அறுபதாயிரம் மெட்ரிக் டன் உப்பு விளைவிக்கப்பட்ட ஆனையிறவு இன்று வெறும் ஏழு மெட்ரிக் டன் அளவு மாத்திரமே உப்பை விளைவிக்கும் அளவிற்கு இளைத்து கட்டெறும்பானது. கந்தளாய் சீனித் தொழிற்சாலையானது செக்கோஸ்லோவாக்

30 ஆம் பக்கம் பார்க்க...






# தமிழ் றொமான்டிக் (Romantic)

நேற்று எங்கள் வீட்டில் ஒரு உரையாடலைத் தொடக்கிவைத்தார் ஒரு ஆச்சி. சோபாவில் அப்பாடா என்று கால்நீட்டிப் படுத்திருந்த என்னிடம், அடியே றொமான்டிக் என்றால் என்ன என்றார். அப்போது ஆச்சியின் பக்கத்தில் சிவனே என்று அவருடைய கணவரும் அமர்ந்திருந்தார்.

றொமான்டிக் பற்றி அறிஞ்சு இனி என்ன செய்யப்போறீங்க என்று கேட்டேன். இருந்தும் இதையெல்லாம் வயதுக்கணக்கை வைச்சு பேசப்படாது என்ற தோன்றியது. எல்லாப் பக்கங்களிலும் திரும்பித்திரும்பி யோசித்துப் பார்த்தாலும் எனக்கு அதற்குச் சரியான தமிழ்ச்சொல் தெரியவில்லை.

அன்ரி, எங்கட தமிழ் ஆட்களுக்கு றொமான்ஸ் அடிச்சுக் கேட்டாலும் வராது. அதனாலதான் தமிழில் அதுக்கு சொல் இல்லை என்றேன். அதுவே ஒரு குறியீட்டு வடிவம்தான் என்றேன். பக்கத்தில அங்கிள் சிரித்ததைப் பார்த்தபோது அவரும் அதை ஆமோதிப்பது தெரிந்தது.

ஆனால் அன்ரியோ விடாப்பிடியாக அது என்ன என்று அறிவதில் குறியாய் இருந்தார். இது என்னடா சோதனை என்று எண்ணினாலும் இந்த வயதிலாவது அதைப் பற்றி அறியத் துடிப்பவரை ஏமாற்றக்கூடாது என்ற எண்ணம் எனக்கு. அன்ரி அங்கிளுக்கு நீங்க கால்பிடிச்சுவிட்டா அது கடமை, ஆனா அங்கிள் உங்களுக்கு கால் பிடிச்சுவிட்டா அது றொமான்டிக் என்று அவரைப் பார்த்தேன். அது எப்படியடி? என்று முறாய்த்தார். பெருயோசனையோடு என்னைப் பார்த்தார். நானும் விடாமல் றொமான்ஸ் பற்றி சொல்லத் தொடங்கினேன். அன்ரி, உங்களுக்காக அங்கிள் சமைச்சு வைச்சு, அதை வடிவா மேசையில அடுக்கி, பிறகு மெழுகுதிரி எல்லாம் ஏற்றி வைச்சு, உங்களுக்கு பிடிச்ச பாட்டை மெதுவா போட்டு, உங்களை இருத்தி, உங்களுக்கு தீத்திவிட்டா (இந்தியத் தமிழர்கள் "ஊட்டிவிட்டா" என்று படிக்கவும்) அது றொமான்ஸ் என்று சொல்லுவாங்கள்.

சொல்லுவாங்களா? அப்ப உனக்குத் தெரியாதே. என்றார்.

ஆகா, நமக்கும் றொமான்ஸ் தெரியாதென்று கதை மாறப்பார்த்தது. நான் விடவில்லை.

அப்படித்தான் அன்ரி. இடைக்கிடை ரோஜா பூங்கொத்து தாரது.

தமிழ் ஆட்கள் மாதிரி மனுசன் முன்னால போக மனிசி பின்னால இழுபட்டுக்கொண்டு போகாமல், இரண்டு பேரும் கையைப்பிடிச்சுக்கொண்டு, இல்லாட்டி அணைச்சுக்கொண்டு போறது. போகும் போதே நெத்தில முத்தம் கொடுக்கலாம்...

மற்ற ஆட்களுக்கு முன்னால மட்டந்தட்டுறதையே வேலையா வைக்காமல், (எங்கட தமிழ் ஆட்கள் மாதிரி) ஒருத்தரையொருத்தர் சிரிக்க வைக்கிறது.

இப்ப விளங்கிட்டா என்றேன். ஓ.. என்று தலையாட்டினார் மெதுவாகத்தான் ஆட்டினார். ஆனாலும் அவாக்கு இன்னும் சரியா விளங்கேலைப் போல கிடந்தது.

அன்ரி! பூ குடுக்கும் போது, சும்மா பூவை நீட்டாமல் முழங்கால்ல இருந்து ஐ லவ் யூ சொல்லிக் குடுத்தால் அது இன்னும் ரொமான்டிக்.

ஓ...

பின்னேரம், சூரியன் மறையுற நேரம் கடல்கரையில வானம் சிவப்பா இருக்குமே அதை ரசிச்சுக்கொண்டு, கால்ல தண்ணிபட கையைப்பிடிச்சுக் கொண்டு நடக்கலாம். இல்லாட்டி நடுராத்திரில நிலவோட நாங்களும் நிக்கிறது. நிக்கும் போது சும்மா நிக்காமல், நீ நிலாவை விட அழகாய் இருக்கிறாய் என்று சொல்லுறது.

எதிர்பாரத நேரம் ஏதாவது வாங்கித் தாரது. கவிதை எழுதித் குடுக்கிறது, இப்படி றொமான்டிக்ல கனக்க டிசைன்ஸ் இருக்கு.

அன்ரி விழுந்து விழுந்து சிரித்தார்.. அங்கிள், நான் றொமான்டிக்கா ரீ போட்டு வாறேன் என்று சிரித்துக்கொண்டே எழுந்தார். (இந் தியத் தமிழர்கள் "டீ" போட்டுக்கொள்ளவும்)

றொமான்டிக் என்பதற்குத் தமிழ் எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஆங்கில அகராதியின் விளக்கம் நினைவிருந்தது. அதையெல்லாம் சொல்லி அன்ரிக்கு நான் குடுத்த விளக்கங்களைக் குழப்பவிரும் பவில்லை.

அங்கிள் சிரித்தபடி ரீயோடு வந்தார் (இந்தியத் தமிழர்கள் "டீ" போட்டுக்கொள்ளவும்). அங்கிள் சிரித்தபடி ரீயோடு வந்தார். வெளியில் நல்ல நிலவு. நான் தூங்கப் போய்விட்டேன். நல்லிரவு.





கவிதா லட்சுமி
(நோர்வே)






















# ‘லண்டனில் இருந்து விமல்’ யாழ். பல்கலைக்கழகத்தில் கேட்போர் கூடத்தில் நூல் அறிமுக விழா




சனிக்கிழமை 20.05.2023 நூலகக் கேட்போர் கூடம் யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சி.ரகுராம் (பீடாதிபதி கலைப்பீடம் யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் தலைமையில் இடம் பெற்றது.

பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் (தலைவர் சிவபூமி அறக்கட்டளை) அவர்கள் நூலினை வெளியிட்டு உரையாற்றினார்.

ஆறு. திருமுருகன் தனது உரையில் லண்டன் பி. பி. சி. ஆரம்பித்த போது அதனை சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் நாதஸ்வரத்தோடு தொடங்கவைத்து, தமிழர்க்கும் தமிழ் கலைக்கும் பெருமை சேர்த்தார். இன்று திரு விமல் சொக்கநாதன் அவர்கள் அச்சேவையில் மாசு ஏற்படாத வண்ணம் பணியாற்றியது சிறப்பானதாகும், என உரைத்தார்.

உலகத் தமிழ் அறிவிப்பாளர் பி.எச் அப்துல் ஹமீத் அவர்கள், விமல் சொக்கநாதன் அவர்கள் தனக்கும் முன் வானொலி யில் இணைந்து எமக்கு வழி காட்டியாகத் திகழ்ந்தவர்.

அண்மையில் ஒரு நண்பர் ஒரு அறிவிப்பாளர் பெயரைச் சொல்லி அவர் பெயரில் ஒரு கலையரங்கம் அமைப்போமோ என்றார். நான் அமைக்கலாம் ஆனால் நீங்கள் குறிப்பிட்டவருக்கு முன்னர் அளப்பெரும் பணிகள் செய்த சோ. சிவபாதசுந்தரம். நவாலியூர் சோ. நடராசா. அவர்களுக்கு மண்டபம் அமைக்கலாம் என்றேன். யார் அவர்கள் என்று அதிசயமாக கேட்டார்கள். அறிவிப்பாளர் நிலை இன்று இதுதான். அறிவிப்பாளர்கள் ஒரு வழியில் துர்ப்பாக்கியசாலிகள்.

காற்றோடு அவர்கள் கரைந்து போகிறார்கள். அவர்கள் எழுத்துக்கள் அச்சு ஏறினால் மட்டுமே அவர்கள் பெயர் நிலைக்கும். என்ற நிலை உள்ளது.

விமல் சொக்கநாதன் சட்டக்கல்லூரியில் படித்துக்கொண்டே வானொலியில் அறிவிப்பாளராக இருந்தார். சட்டம் படித்தாலும் அவருடைய தாகம் வானொலியாகவே இருந்தது. வானொலிக் கலை எனும் நூலினை முன்பு விமல் சொக்கநாதன் எழுதியிருந்தார். இன்று லண்டனில் இருந்து விமல் என்ற நூலை தந்துள்ளார். மேலும் அவர் பணிசிறக்க வாழ்த்துகள் தெரிவித்தார்.

நூல் பற்றி கோகிலா மகேந்திரன் குறிப்பிடுகையில் ஒருவரது எழுத்தை வைத்தே அவருடை குணாதிசயங்களை அறிந்து கொள்வேன். எனக்கு அவர் நல்ல பண்பானவர் என்று அவர் எழுத்து மூலம் அறிய முடிகிறது. அவர் நாம் அறியாத பல செய்திகளை தந்து உள்ளார். கருக்கலைப்பு பற்றிய அவரது கருத்து எனக்கு முரன்பாடாக தோன்றுகிறது. கரு என்பது ஒரு உயிர். அதனை அழிக்கும் உரிமை எவருக்கும் இல்லை என்பது என்கருத்து. என்று கூறினார்.

மேலும் பல பிரமுகர்கள் நூல் அறிமுக விழாவில் கலந்து சிறப்பித்தனர். விழா குறித்த நேரத்தில் நிறைவு பெற்றது.

# யாழ்., நகரில் கே.டானியலின் ‘சாநிழல்’ புத்தக வெளியீட்டு விழா







14.05.2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண த்தில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் கே.டானியல் அவர்களின் “சாநிழல்“ புத்தக வெளியீடு இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு குறித்த நேரத்தில் மக்கள் திரண்டு வந்து ஆதரவு தந்தது டானியல் எழு த்து மீது மக்கள் கொண்ட அன்பை வெளிப்படு த்தியது.

அவரது எழுத்துகள் உயிர்வாழ்கின்றது. விழாவிற்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தலைமைதாங்கி நடத்தினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த பிரமுகர்கள், திரு. டானியல் வசந்தன், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் மாக்ஸ், திரு. அசுரநாதன், முனைவர் ச.மனோன்மணி. திருமதி. எஸ்தர், திரு. ராகவன், செல்வி அஜனா வசந்தன். திரு ஆஷிக்கஹீனா. ஆகியோர்.

படங்கள். வெற்றிமணி (யேர்மனி)






# இந்திரவிழாவும் வல்வெட்டித்துறையும்

வே.கேசவன்
(நாடகப்பள்ளி, இலங்கை)










06.05.2023 அன்று வல்வெட்டித் துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தியாவின் தமிழ் நாட்டின் நாகை மாவட்டம் பூம்புகாரில் அகத்திய முனிவரால் சொல்லப்பட்டு செம்பிய மன்னனால் தொடங்கப்பட்ட இந்திர விழா நெடுக்கிள்ளி மன்னனால் கைவி டப்பட்டபோது பூம்புகாரை கடல் கொண் டது என்று மணிமேகலையில் சொல்லப் பட்டுள்ளது. மழை காலத்தே பெய்ய வேண்டும் காலச்சீற்றம் பசி பிணி நீங்கி மாந்தர்கள் வாழ தேவர்களின் தலைவ னான இந்திரனை நோக்கி சாதிய வேறு பாடுகள் இன்றி ஊர் மக்களால் எடுக்கும் பெருவிழாவே இந்திர விழாவாகும்.

பூம்புகாரின் துறைமுகப் பட்டிணத் தில் சோழ மன்னர்களின் வாரிசுக ளின் வழிவந்தோர்களினால் வண் ணமயமான மின்விளக்குகளினால் வீதியெங்கும் அலங்கரித்து ஆடல் பாடல்களோடு பல்வகை உணவுகளை வழங்கி சித்திரை மாத முழுநிலா நாளில் சித்திராப்பௌர்ணமி அன்று இந்திரலோகமாக காட்சி அளிக்கும்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறையில் மட்டுமே இந்த இந்திரவிழா முத்துமாரி அம்மன் கோவிலின் தீர்த்த உற்சவ நாளான அன்று இரவு மிகவும் பிரமாண்டமாக அதே சித்திரை முழுநிலா அன்று மிகவும் வண்ண விளக்குகளினால் சுமார் மூன்று நான்கு கிலோமீற்றர் தூர வீதிகளை அலங்கரித்து இசை நடனம் விருந்து என பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாகும். இங்கு விசேடமாக புகைக்குண்டு விடுவதை இதே போல எங்கும் பார்த்ததில்லை

ஆமாம் வல்வெட்டித்துறையும் ஒரு கரையோர துறைமுக நகரமாகும். சோழர்களின் வழிவந்த வல்வெட்டித் துறை மக்கள் வீரத்திலும் புதுமை களிலும் புதுமையானவர்கள்தான் முதன்முதலாக வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்கா வரை அன்னபூ ரணி என்ற கப்பலை ஒட்டிச் சென்ற வர்களும் வியாபார மதிநுட்பங்களை அறிந்தவர்களும் விடுதலைக்கு பல மாபெரும் விடுதலை வீரர்களையும் கொடுத்தவர்களும் இவர்கள்தான்.

இந்தியாவில் இருந்து வள்ளம் வந்துவிட்டது என்று சொன்னால் ஓடோடிச்சென்று பார்த்தால் கடற்கரை மணலில் மேல் பன்பாய்களை விரித்து அதன் மேலே வாசனைப் பொருட் கள் எவர்சில்வர் பாத்திரங்கள் பல வர்ண துணிவகைகள் மற்றும் வீட்டிற் குத் தேவையான காணக்கிடைக்காத பொருட்களை அடுக்கி விடுவதே ஒரு பாரிய சந்தை ஆகும்.

லூர்ட்ஸ் மாதா புனிதப்பயணம் 2023
April, July, August மாதங்களில்
எமது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க
பஸ் மூலம் செல்ல ஒழுங்கு செய்து உள்ளோம்.
எமது சேவையின் சிறப்பை முன்னர்
பயணித்தவர்கள் நன்கு அறிவர்.
பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.
தொடர்புகளுக்கு:
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489







கதை, வசனம்,
பாடல், ஒளிப்பதிவு இயக்கம்
கண்ணா B.F.A.

# "எழுதாத கவிதைக்கு முதல் பரிசு"

இசை : சஞ்ஜே சிவா

தயாரிப்பு : வெற்றிமணி



(ஆச்சி) சின்னப்பிள்ளை, (அப்பு) கிருஷ்ணன், அனித்தா, ஜெயந்தன், லோகநாயகி ஸ்ரீஸ்கந்தராஜா, டாக்டர் முருகானந்தன், கவிஞர் வடிவேல் வேலழகையன் , சாந்தி, தெய்வேந்திரன், தெய்வேந்திரன் சேனாதிராசா (யோ)

பருத்தித்துறை முனை கடற்கரை, வல்லிபுரக்கோவில், சுட்டிபுரம், வயற்காடு மட்டுவில் நுணாவில் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, காரைநகர், ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.

# வடுக்களும் வலிகளும்



மறந்துவிடச் சொல்கிறீர்கள்
மன்னித்து சேர்ந்து புரிந்து வாழச் சொல்கிறீர்கள்
மன்னித்துக் கொள்ளுங்கள் முடிந்தால்
மறக்கச் சொல்லித் தாருங்கள்

எவற்றை நான் மறப்பது?
பாழாகிப்போன என்
பள்ளிப் பிள்ளைப் பருவத்தையா?
பெட்டகத்தில் பூட்டிவைத்த என் இளமையின்
கனவுகளையா? இழந்துபோன உறவுகளையா?
இல்லையெனில் உருக்குலைந்த என்னூரையா?
இவற்றில் எவற்றை என்னால் மறக்கமுடியும்?

மறந்து போவதற்கும் மன்னித்து வாழ்வதற்கும்
நானொன்றும் மகாத்மாவுமல்ல
பரமாத்மாவுமல்ல
அழித்துவிட்டு வாழ்வதற்கு அவை
என் நினைவுகளும் அல்ல
சிதைத்துவிட்டு கட்டியெழுப்ப அழிந்துபோன
எம்மவர் வீடுகளுமல்ல
காலத்தின் தழும்புகளால் மாறாத
காயமான ஆறாத வடுக்களவை
மன்னித்துக் கொள்ளுங்கள் உங்களால் முடிந்தால்
மறக்கச் சொல்லித்தாருங்கள்

அத்தனையும் இழந்தபின்பும்
இன்றும் எங்கள் சிந்தனைகள் பெரிது
மனதின் செயல்வடிவம் பெரிது
எண்ணற்ற கனவுகளும்
வானுயரும் கற்பனையும்
ஒய்யாரமாய் வந்தமர்ந்து
ஓலமிட்டு உதைத்தபடி

கனவுகளின் அடியிருப்பை
தட்டிக்காட்டி மறைகயிலே
நிசப்த வெளியில்
நாம் நிறைவேறா நினைவுகளுடன்

யார் தந்த பாவம் இது?
யார் தந்த சாபமிது?
கரைகடந்த கனவுகளும்
கலைந்துபோன கற்பனையும்
கடந்துபோன நாட்களுமாய்
இளையோர் எம்கனவை
இருட்டடிப்புச் செய்தது யார்?

சின்னஞ்சிறு மழலைகளாய்
சிறகடித்துப் பறக்கவில்லை
சிறகு விரித்த சிட்டுக்களாய்
சாரல்மழை குளிக்கவில்லை
சிந்தையிலே பயம்கொண்டு
பொந்துகளில் ஒழிந்திருந்தோம்
வெந்தமணல் புழுதியிலே
வெம்பியழுது புரண்டெழுந்தோம்

நட்சத்திர நிலவொளியில்
நாங்கள் நிமிர்ந்து வானை பார்த்ததில்லை
ஒன்றிரண்டு சொல்லி அவற்றை எண்ணியதும்
நினைவிலில்லை
தூரத்தில் கேட்டசத்தம்
காதுகளில் தூது சொல்ல
புதரடிப் புகலிடத்தில் புகுந்துநாம்
தஞ்சம் கொண்டோம்

நிமிர்ந்து பார்க்க சக்தியற்று,
வடித்த கண்ணீர் துடைக்க மறந்து
மரணபய மனத்தோடு தரையோடு
தரையாக புரண்டெழுந்த பொழுதுவரை
மாறாத வடுக்களாய் மனதைவிட்டு மறையவில்லை

மன்னித்துக் கொள்ளுங்கள்
உங்களால் முடிந்தால் மறக்கச் சொல்லித் தாருங்கள்
மறந்துவாழ முயல்கிறேன் சேர்ந்து புரிந்துவாழ
முயல்கிறேன்.

சர்மிலா வினோதினி (இலங்கை)



வெற்றிமணி பத்திரிகை 29ம் ஆண்டு நிறைவில், ஆனிமாத இதழினை இலங்கைச் சிறப்பிதழாக வெளியிடுகின்றது. வெற்றிமணி பத்திரிகையில் தனது படைப்புக்களை வெளியிட்டு வருபவரும்,ஊடகவியலாளருமான சர்மிலா வினோதினி அவர்களுக்கு, வெற்றிமணி வெள்ளி விழா (2019) மலரினை, வெற்றிமணி பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் இன்று (19.05.2023) ஐ.பி.சி கலையகத்தில் கையளித்தார்.



29 ஆம் ஆண்டு நிறைவில்
மகிழும் உங்கள் வெற்றிமணி
01.06.2023

யேர்மனியில் தேர்க்காலம் 2023




யேர்மனியில் ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள் 2023

ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்
Tel: 02388 302 223
கொடி: 05.06.2023 - தேர்: 18.06.2023
Siegenbeck Str 4-5, 59071 Hamm

டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்
Tel: 0231 72515165
கொடி: 24.06.2023 - தேர்:02.07.2023
Klefer Str 24, 44225 Dortmund

Münster க்கு அருகாமையில் Warendorf நகரில்....
RESTAURANT
Westfälischer Hof
Saal Und Restaurant!
Telefon: +49 2584 9348481





Bartholomäusstraße 29, 48231
Warendorf, Germany

உங்கள் நிகழ்ச்சிகளை அழகுடனும் சுவையுடனும் செய்திட
எமது மண்டபம் அழைக்கிறது

பிறந்த நாள், நத்தார் தினக் கொண்டாட்டம், திருமண விருந்து
மற்றும் எந்தச் சிறப்பு நிகழ்வுகள் என்றாலும் எம்மிடம்
உணவு சிற்றுண்டிகள் உட்பட யாவும் செய்து தருகின்றோம்.
விருந்தினர்கள் விளையாட Kegelbahn ம் உண்டு.

அழகிய மண்டபம் தொடர்புகளுக்கு 01794855554

Restaurant 60 Sitzplätze | Kegelbahn 30 Personen
Biergarten kann 200 Plätze
Saal 300 Plätze



Öffnungszeiten: Geöffnet . Schließt um 23:00| Telefon: +49 2584 9348481

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மனதை மயக்கும்

ஒரு சுற்றுலாத்தளம் ஆகும். இதற்கு மாறாக, கல்குடா கடற்கரையானது உள்நாட்டுப் போர் மற்றும் 2004ல் ஏற்பட்ட சுனாமி காரணமாக பெரும்பாலும் வெறிச்சோடியே காணப்படும்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பாசிக்குடா கடற்கரை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்து வருகின்றது.

இருப்பினும், அதன் அழகைக் குறைக்கும் வகையில் அதன் சுற்றுச்சூழல் மாசடைந்து காணப்படுவதாக சுற்றுலாப் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இலங்கை நாட்டின் இயற்கையின் உறைவிடமான கிழக்கின் பாசிக்குடா கடற்கரையைப் பார்வையிட பெருந்திரளான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றி வரும் பாசிக்குடா மற்றும் அதன் சுற்றுச்சூழல் உரிய பராமரிப்பின்றி காணப்படுவதாகவும் அங்கு காணப்படும் அதிகளவிலான முருகைக் கற்களினால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் சுற்றுலாப் பயணிகள் தெரிவித்தனர். மேலும், கரையோரத்தில் காணப்படும் அசுத்தமான நீரோடை கடல் நீரோடு சங்கமிக்கும் பிரதேசம் மணல் திட்டியாக சீரற்று உள்ளதோடு கழிவுப் பொருட்கள் அதில் காணப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் சுற்றுலாப் பயணிகள் குற்றம் சுமத்தினர். இயற்கையின் கொடையான அழகை பேணிப்பாதுகாப்பது நம் அனைவரினதும் தார்மீக பொறுப்பாகும்.

பாசிக்குடா கடற்கரையின் ஒரு பகுதி, அலைகள் குறைவான, மட்டமான நீரினை உடையதும் முருகைக்கற்கள் நிறைந்ததும் நீந்துபவர்களுக்கு மிகவும் இதமானதுமாகும்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வீடு ஒரு வாழ்நாள்....



என்ற எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை.இலத்திரனியல் சாதனங்கள், இறுவட்டு, ஈ புக்ஸ், இணையம் என்பனவும் வாசிப்பில் செல்வாக்குச்செலுத்த ஆரம்பித்துள்ளன. அவற்றைத்தவிர்ப்பது ஆரோக்கியமானதல்ல.காலத்தின் தேவையாகி விட்டது.சாதகத் தன்மையுடனும் பகுத்தறிவுடனும் அவற்றைப் பயன்படுத்த இளைய சந்ததிக்கு வழிகாட்டப்பட வேண்டும்.

நல்லதொரு வீடு பல்கலைக் கழகம், வீடே கோயில் என்றெல்லாம் சொல்வார்கள்.

அதேபோன்று நல்லதொரு வீடு நல்லதொரு நூலகமாகவும் அமைய வேண்டுமென்ற கருத்தை நிறுவி உறுதிப்படுத்துவோம்.

Dickwelle kamaal.
12.05.2023.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சீட்லெஸ் மாம்பழங்கள்...

குரோமசோம்கள் கொண்ட தாவரங்களாக மாற்றிவிட்டால், அவைகள் விதைகளற்ற காய்கனிகளைக் கொடுக்கும், அப்படித்தானே? என, எனது விளக்கத்தை இலகுவாக்கினாள் மனைவி. அவளும் அடிப்படை விஞ்ஞானம் படித்தவள்.

உண்மைதான். ஆதிகாலத்தில் எல்லா வாழைப்பழத்துக்கும் விதைகள் இருந்தன. அவை இன்றும் காடுகளிலும் மலைகளிலும் வளர்கின்றன.

ஓஹோ...!

கால ஓட்டத்தில் விதைகொண்ட வாழைகள், இனவிருத்தியடைந்து விதைகளற்றவை ஆகின. எப்படி? இயற்கையாகவா செயற்கையாகவா?

அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் அல்லது இடி, மின்னல், வெப்பம் காரணமாக மிகமிக நீண்ட காலங்களுடாக, மூன்றடுக்கு குரோமசோம்கள் கொண்ட, விதைகளற்ற வாழைகள் இயற்கையாக விருத்தியடைந்தன.

மற்றத் தாவரங்களில்?

அவை செயற்கை முறையில் குறுகிய காலதுக்குள் மாற்றப்படடவை. தர்பூசனி, பப்பாளி போன்றவை இதற்கு நல்ல உதாரணங்கள்.

அப்போ, விதைகளற்ற தாவரங்களின் இனப்பெருக்கம்? பதிய முறைகளின் மூலம் தான். வாழையில் குட்டிகள் மூலமும் திராட்சையில் தண்டுகள் மூலமும் பதிய முறை இனிப்பெருக்க முறையே கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் பப்பாளி, தர்பூசனி ஆகியனவற்றின் மும்மடிய விதைகளை வியாபார நிலையங்களில் வாங்கலாம். இந்த விதைகளைத்தான் திரைப்படத்திலுள்ள காட்சியில் முதிய விவசாயிக்கு, வியாபாரி விற்க முனைந்தது. இவ்விதைகளிலிருந்து முளைத்து வளரும் தாவரங்கள், காய்கனிகளைக் கொடுக்கும். ஆனால் அவற்றில் விதைகள் இருக்காது.

என்ன அதிசயமாய் இருக்கு! அவங்கள் விதை விக்கிறாங்கள். ஆனால் அற்றிலிருந்து வளர்பவை விதைகளைக் கொடுக்காது? இது கொஞ்சமும் லொஜிக்காக இல்லையே. இதைத்தானே அந்த முதிய விவசாயி படத்தில் கேட்டார்.

உண்மைதான். உதாரணத்துக்கு தர்பூசனியை எடுப்போம். இதன் விதைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடம், நாலடுக்கு (Tetraploid) குரோமசோம்கள் கொண்ட தர்பூசனித் தாவரம் இருக்கிறது. பெரும் பணம் செலவு செய்து, அதை ஆராச்சி முலம் விருத்தி செய்திருப்பார்கள். இது அவர்களின் பணம்காய்க்கும் மரம். இதை அவர்கள் வெளியில் விடமாட்டார்கள். இதனுடன் இரண்டடுக்கு குரோமசோம்கள் (இருமடியம்) கொண்ட சாதாரண தர்பூசனியை, மகரந்தச் சேர்கை முலம் கலப்பார்கள்.

ஓ...!

இக்கலப்பின் மூலம் உருவாகும் தாவரம், விதைகளை உற்பத்தி செய்யும். இந்த விதைகளைத்தான் விவசாயிகளுக்கு விற்பார்கள்.

இந்த விதைகளை விதைத்தால்?

அவை முளைத்து, வளர்ந்து பழம் கொடுக்கும். ஆனால் அதில் விதைகள் இருக்காது. இதுதான் நாமெல்லோரும் விரும்பும் சீட்லெஸ் தர்பூசனி! இது ஒருவகையில் பன்னாட்டு நிறுவனங்கள், உலக விவசாயத்தியில் செலுத்தும் ஆதிக்கம் என்றும் சொல்லலாம்.

எனது இந்த விளக்கம் மனைவிக்குப் புரியவில்லை என்பது அவளது முகத்தில் தெரிந்தது. இதிலும் இலகுவாக என்னால் இந்த விஷயத்தைச் சொல்ல முடியவில்லை.

உலகம் அழியப்போகுது. வேறொன்றுமில்லை, என பொதுவாகச் சொன்ன மனைவி, பிள்ளைகள் விரும்பி உண்ணும் சீட்லெஸ் தர்பூசனியை நறுக்கத் துவங்கினார்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கட்டமைப்புக்குள்...

இது போன்ற செயற்பாடுகளே ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் .இவற்றிக்கு சந்தா காசுகளை கூட பயன்படுத்தலாம். ஆக பெண்கள் தங்களை சார்ந்து சிந்திக்கவும், தங்களை சமூகத்தில் மேம்படுத்தி கொள்ளவும் இது ஒரு வகையில் வழிவகுக்கலாம் .

இங்கே ஆணாதிக்கம் என்பதை தவிர்த்து மலையக பெண்களுக்குள் இருக்கும் அடிப்படைவாத கொள்கைகளே பிரதான காரணமாகும், இவற்றை உடைத்து வெளியே வந்து சாதிக்க துடிக்கும் அத்தனை பெண்களையும் முதலில் ஓரங்கட்டி வைக்க எத்தனிப்பது இந்த அடிப்படை வாத கொள்ளகையில் மூழ்கி போன இரண்டாம் , மூன்றாம் தலைமுறை பெண்களே ஆகும் .

அதை செய்யாதே, இதை செய்யாதே , அப்படி பேசாதே , இப்படி கேட்காதே , என தங்களுக்கு தாங்களே ஒரு வட்டத்தை அமைத்து அதற்கு வெளியே ஆண்கள் , சமூகம் , கௌரவம் , சாதி என பல கோடுகளை இட்டு வெளியே வரத்துடிக்கும் பெண்களுக்கு தடுப்புச்சுவர் கட்டி விடுகிறார்கள் .

ஆண்களை விட அதிகமாக உழைக்கும் மலையக பெருந்தோட்ட பெண்கள் , ஆண்களை சார்ந்து நிற்பது என்பது அடிமை வாழ்கை முறையன்றி , சமூக கௌரவ வாழ்கை முறை என்று எவ்வாறு நோக்குவது. மலையகத்தில் பெண்களின் சுதந்திரமும், சமூக கலாச்சாரங்களும் பின்னிபிணைந்ததாக உள்ளது. ஒரு பெண் வீட்டை விட்டு வெளியேறி விட்டால் அவளுக்கான பாதுகாப்பு அவள்தான் என்று அவளுக்கு புரிய வைப்பதே நமது பிரதான கடமையே அன்றி , அவளின் எதிர்கால வாழ்வை கலாச்சாரம் , பாதுகாப்பு என முட்டுக்கட்டை இட்டு மறைத்து வைப்பது இல்லை .

மலையகத்தில் கற்ற சமூகம் இனி பெண்களின் கல்வி , சுகாதாரம் , வேலை வாய்ப்பு என அது சம்பந்தமாக சிந்திக்க வேண்டும், சுய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக அதிகமாக விழிப்புணர்வு வழங்க வேண்டும் , திருமண வாழ்கை , பாலியல் வாழ்கை, கருக்கலைப்பு , கல்வி, சிறுவர் பராமரிப்பு போன்றவற்றில் அடிப்படை மாற்றங்களும் , சமூக விழிப்புணர்வும் தேவை . சமூக மாற்றம் என்பது கல்வியால் மட்டுமே உருவாக்க முடியும் .

கற்ற சமூகம் சிந்திக்க வேண்டியது மாற்றம் என்கிற ஒரு விடயத்தை , அது அரசியல் பீதியாகவும் , சமூகம் பீதியாகவும் சிந்திக்க வேண்டும் . பெண்கள் எல்லா துறைகளிலும் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் . தமக்கான வட்டத்தில் இருந்து வெளியே வரவேண்டும் .

இங்கே பெண்ணுக்கு என்று தனி பாதை வேண்டாம் , இருக்கும் ஒரு பாதை இருவருக்கும் சமம் என்பதை உணரவேண்டியதும் , உணர்ந்தபின் , உணர்த்தவேண்டியதும் கூட எல்லோருடைய கடமையும் ஆகும்






# இலங்கையில் கண்டேன் மகிழ்ந்தேன்....


செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், பி.எச்.அப்துல் ஹமீத். சிவகுமாரன், விமல். சொக்கநாதன்


கவிஞர் வடிவேல் வேலழகையன்


எழுத்தாளர் ரஞ்ஜினி சுப்பிரமணியம் அவர்களுடன்


கலாசூரி.திவ்யா. சுஜேன் அவர்களுடன், சிவகுமாரன்


டாக்டர் கே. முருகானந்தன் அவர்களுடன்


கலைஞானச் சுடர் ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன் அவர்களுடன்


கம்பவாருதி ஜெயராஜ் அவர்களுடன்


அருட்தந்தை சுமன் அவர்களுடன்


யோ.சாந்தி வெற்றிமணிக் குடும்பம்


உடகவியலாளர் ஷர்மிலா வினோதினி. அவர்களுடன்

## பனங்கொட்டை மிதி வண்டி

துவிச்சக்கரவண்டியின் இரு மிதியும் உடைந்துபோனதால், பனைமரத்தின் பனம்கொட்டையை தன் மதியால் மிதியாக மாற்றி துவிச்சக்கர வண்டியை பாவனையில் உள்ளபடி வைத்துள்ளார். பனங்கொட்டை தேய்ந்தால், வீட்டில் கும்பி கும்பியாக இருக்கும் பனங்கொட்டைகள் கைகொடுக்கும் என்கிறார், ஒரு முதிய தொழில்நுட்பவியலாளர்.

**(அராலி. வட்டுக்கோட்டை)**

**படம். வெற்றிமணி**



## செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் அன்பான வேண்டுகோள்!

எங்கள் மண்ணில் ஒற்றுமை பலம் மிக அவசியம். நாம் பல்வேறு நிலையில் தோற்றுப் போயிருக்கின்றோம். அதற்கு அடிப்படைக் காரணம் இவ்வளவு உயிர்களை நாம் இழந்த பின்பும் எங்கள் இனத்தினிடையே ஏதோ ஒரு சாபக்கேடாக ஒற்றுமையின்றி சிதறிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே இப்பொழுது நாம் எதிர்பார்ப்பது அனைத்து தமிழ் அமைப்புக்கள், கட்சிகள் எல்லோரும் பொது மக்களின் நன்மை கருதி பதவிகளுக்கு அப்பால் மக்கள் பக்கம் கவனத்தை திருப்பி மக்களினுடைய நிம்மதிக்காக ஒன்றுபட்டு ஏதாவது ஒரு உருப்படியான தீர்வைப் பெறுவதற்கு நல்லதொரு வழியினை அவர்கள் பின்பற்ற வேண்டுமென வேண்டுகின்றேன்.

**(தலைவர். சிவபூமி அறக்கட்டளை.)**





15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஆகாயம் இல்லா நிலவுகள்...

23 ம் திகதி 'சர்வதேச விதவைகள்' தினம் அனுசரிக்கப் படுகிறது. லூம்பா அறக்கட்டளை நிறுவுனரின் முன்மொழிவுக்கு அமைய 2011ம் ஆண்டில் இருந்து ஐ.நா.சபையினால் இத்தினம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் படுகின்றது.

உலகெங்கும் விதவைகள் எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கல்கள் , பாதுகாப்பின்மை, பாகுபாடு,களங்கம், தீங்கு விளைவிக்கும் பாரம்பரிய நடைமுறைகள் ஆகிய அவல நிலைகளை நினைவு கூரும் விதமாகவும், அவர்களுக்கான முன்னேற்றம் அடிப்படை உரிமைகள் ஏனைய நலன்களை முன்னுரைக்கும் முகமாகவும் இத்தினம் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையின் வடகிழக்கைப் பொறுத்தவரை இயற்கை மரணங்கள், தற்கொலை, விபத்துகள் என்பன தவிர்த்து இறுதி யுத்தத்தினாலும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோராலும் பல்லாயிரம் பேர் விதவைகள் ஆக்கப் பட்டார்கள். பெண்களை குடும்பத் தலைவிகளாகக் கொண்ட இவர்களது தலையாய பிரச்சனையாக இனம் காணப்படுவது வாழ்வாதாரத்துக்கான வழிகள் இல்லை என்பதே. கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்கள் பெண்களுக்கான வேலையின்மை அதிகமாக இருக்கும் மாவட்டங்களாகவும் இனம் காணப்பட்டு உள்ளன.

சமூக விமர்சனங்களுக்கு அஞ்சியும், தமது குழந்தைகளை எண்ணியும், காணாமல் ஆக்கப்பட்ட கணவரை நினைத்தும் மறுமணம் என்பதும் பலருக்கு இயலாததாகவே உள்ளது. கணவரை இழந்த, குழந்தைகள் இல்லாத பெண்கள் மறுமணம் புரியும் போது தெளிவான முடிவினை எடுக்க முடியும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மனைவிமாரின் உணர்வுநிலை மிகவும் சிக்கலானது.

தான் கணவரை இழந்தவளா இல்லையா ? நீண்டகாலக் காத்திருப்பின் பின்னும் மறுமணம் புரியலாமா வேண்டாமா?

அழகாக ஆடைஅணிந்தால் சமூகம் தூற்றுமா? எத்தனை காலம் உணர்வுகளைக் கட்டுக்குள் வைத்திருப்பது? நிலைமாறி களங்கம் சுமப்பேனா? எனும் பலவித மனப் போராட்டங்களும், காணாமல் ஆக்கப்பட்ட கணவரைத் தேடும் புறப் போராட்டங்களுமாக அவர்களது நிலையை எண்ணிப் பார்க்கவே மனது கனக்கிறது. இவ்வாறான வர்கள் மறுமணம் புரிந்தாலும் காணாமல் போன முன்னாள் கணவரின் நினைவுகளை முற்றாக மறக்க முடியாத பரிதவிப்பு ஆயுள் முழுமையும் தொடரும். மறுமணம் புரியும் ஆண்கள் தம் முன்னாள் மனைவியை நினைவு கூர்வதையும் போற்றுவதையும் சகஜமாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் மறுமணம் புரியும் பெண்கள் தமது உணர்வுகளை அவ்வாறு வெளிக்காட்ட ஆண்களின் மேலாதிக்க மனநிலை அனுமதிப்பதில்லை. பாலினம் சார்ந்த சம்பிரதாய சமனின்மை இங்கும் தொடர்கிறது .

அரச உதவித் திட்டங்களும்,வங்கிக் கடன்களும், புலம்பெயர் தமிழர்களின் உதவிகளும் நிலைமையை சீராக்கப் போதுமானவையாக இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட கணவரின் மரணச்சான்றிதழ் இல்லாத பட்சத்தில் கிடைக்கும் உதவித் தொகை, மரணம் உறுதிப்படுத்தப் பட்டவர்களுக்கு கிடைப்பதை விட

மிகவும் சிறியது . கால்நடை வளர்ப்பு, கைவினைப் பொருட்கள், மண்பாண்டம், பனம்பொருள் சிறுதொழில்கள், அம்மாச்சி உணவகம் ஆகியவை விதவைகளுக்கான சில தொழில் வாய்ப்புகளை உருவாக்குகின்றன. கைத்தொழில் முயற்சிகளில் போதிய அறிவின்மை, அதன் மூலமான வருமானப் பெருக்கத்தைப் பெறுவதில் தடையாக உள்ளது. இவை தவிர தனிமனிதராக நாம் என்ன செய்யலாம் ? வறுமையில் வாழும் ஒரு விதவைக்கு அல்லது உறவுக்கு பொருளாதார உதவி அவரது குழந்தையின் கல்வியை மேம்படுத்த வழிவகை விதவைகளுக்கான பொது நிதிகளுக்கு பங்களிப்பு , நிதி சேகரிப்பில் உதவுதல் அரச மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் பயனுள்ள கருத்தரங்குகளுக்கு விதவைகளை வழிகாட்டல் அதுவும் இயலாதவர்கள் தம்மால் இயன்ற மன ஆறுதலையும் பக்க பலத்தையும் அவர்களுக்கு அளித்தல் என்பன சிறுதீர்வாக அமையும்.

சென்ற நூற்றாண்டை விட இன்று விதவைகள் நம் சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ளப் பட்டவர்களாகவே வாழ்கின்றனர். விதவைகளின் துயரைப் புரிந்து கொள்வோம். சமூகத்தில் சம உரிமை உள்ளவர்களாக வாழ வைப்போம்.

22 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நல்லாயிருக்க வேண்டிய நாடு ...

அரசாங்கத்தின் மூலம் இலங்கைக்கு கிடைத்த மரபுவழி சொத்து. இந்த ஆலை ஒரு நாளைக்கு 1200 டன் கரும்பை அரைக்கும் திறன் கொண்டது. 160 நாட்களில் 192,000 மெட்ரிக் டன் கரும்பை அரைப்பதன் மூலம் 16320 டன் சர்க்கரை மெட்ரிக் உற்பத்தி செய்யபட்டது .கிங் கங்கை கீழ் பள்ளத்தாக்கில் கரும்பு சாகுபடி மிகவும் செழிப்பாக இருந்தது. நாகொட பகுதியில் பல்வேறு இடங்களில் சிறிய கரும்பு மோல்கள் தொடங்கப்பட்டது. ஆனால் திறந்தபொருளாதாரத்தின் பின்னணியில் கந்தளாய் சர்க்கரை ஆலை கடந்த 25 வருடங்களாக எதையும் உற்பத்தி செய்யவில்லை. தொழிற்சாலையில் ஒரு ஒரு கைப்பிடி சீனியை கூட உற்பத்தி செய்யமுடியாமல் போனதால் இழுத்து மூடப்பட்டது கந்தளாய் சீனி ஆலை ! சுமார் மூவாயிரம் குடும்பங்களை வாழ வைத்த வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை என்னவானது ? ஜேர்மனியின் உறுதியான தயாரிப்புகளான அந்த தொழில்சாலையின் இயந்திரங்களின் நிலை என்ன ?

இப்படித்தான் எங்களுடைய உள்ளூர் உற்பத்தித் தொழில்கள் இல்லாமல் போயின. சிறு மற்றும் மத்திய தர தொழிற்துறைகள் பல வீழ்ச்சி காணும் நிலையை அடைந்துள்ள. நமக்கு என்ன நடந்தது? இந்த நிலைக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் யார்? நாம் சகலருமே இதற்கு பொறுப்புகூற வேண்டியவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்பதே உண்மை. அரசியல் வாதிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூகம், ஊடகங்கள், அரச நிர்வாகிகள் உற்பட எவராலும் இந்த பொறுப்பிலிருந்து விடுப்பட்டுச் செல்ல முடியாது. இனியும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதால் எந்த பயனும் கிட்டப்போவதில்லை. நம் நாட்டினை கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்குமே உண்டு.

இதில் இலங்கைவாழ் தாயக மக்கள், வெளிநாடுவாழ் புலம்பெயர் மக்கள் என்கிற எந்தவொரு பாகுபாடும் இருக்கவேண்டியதில்லையே ....ஆனால் இதில் தமிழ் மக்களுக்கான சமத்துவம் வழங்கப்பட்டால் மட்டுமே இவற்றை முன்னெடுத்துச் செல்வதில் தமிழ் மக்கள் பங்கு சாத்தியமாகும் என்னும் கருத்தில் மறுதலிப்பு இல்லை.

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வாழ்க்கை ஒரு செவ்வகம்

பிள்ளையை சாட்டி வீடு மாறிப் போறவன் தன்டை வீடு எண்டு நாலை ஞ்சு வருசம் தென்னை மாவெண்டு நட மகள் கலியாணம் கட்டி வர திருப்பியும் தனி அறை வாழக்கைக்கு தள்ளப்படுவான். இப்பிடி மகன், புருசன் அப்பா எண்ட முக்கோண வாழ்க்கை வட்டம் ஒரு செவ்வக அறைக்குள்ளயே தொடங்கி அதுக்குள்ளயே முடிஞ்சுடும்.

சின்னனில வீட்டை இருக்கிற ஒரு extra அறையும் பொம்பிளைப்பிள்ளை, குமர்ப் பிள்ளை, வளந்த பிள்ளை எண்ட பேரில பொம்பிளைகளுக்கே குடுபடும். பெடியளுக்கிசளையஉல என்னவோ கக்கூஸில மட்டுந்தான். கிணத்தடியே குளிச்சிட்டு உடுப்பு மாத்திட்டு அந்த ஒண்டையே அண்டைக்கு முழுக்கப் போட்டுதிருப்பியும் இரவு கொடீல இருக்கிற சாரத்தை மாத்தி, தோய்க்கிற பஞ்சீல ரெண்டாம் நாத்தும் அதே உடுப்பை போட்டுக்கொண்டு திரிவாங்கள் ஆனாலும் சாரத்தை மட்டும் தோய்ப்பாங்கள்.

நானும் கட்டினாப் பிறகு ஒருநாள் கடைக்குப் போக மனிசி என்னைப்பாத்து " அப்பா முதல் நாள் நாங்கள் சந்திக்கேக்க நீங்க போட்டிருந்த பிரவுண் றீசேட் மாதிரி ஒண்டு வாங்குவமே" எண்டு பத்து வருசத்துக்கு முன்னை நடந்ததைச் சொல்ல, எனக்கு வலு சந்தோசம், என்டை மனிசி அப்பவே என்னை வடிவாத்தான் கவனிச்சிருக்கெண்டு. ஆனாலும் சந்தோசம் தொடங்கமுதலே " நான் என்ன போட்டிருந்தனான் ஞாபகம் இருக்கோ" எண்ட விடை தெரியாத கேள்வியைக் கேட்டு அண்டைக்கும் மனிசி என்னை முட்டாள் ஆக்கிச்சுது. வருசம் முழுக்க ரெண்டு உடுப்பை போடிற எங்களையும் நேரத்திக்கு ரெண்டு உடுப்பு போடிற உங்களையும் ஒப்பிட்டு ஞாபகம் இருக்கா எண்ட கேள்ளவி very biased எண்டு நான் மனிசிக்குச் சொல்ல, "உப்பிடித்தான் உம்மடை கதை எல்லாம் நல்லா சாட்டுச் சொல்லிறீர் " எண்டு மனிசி பார்க்க நான் அமைதியானேன். பெடியளுக்கு சாப்பிடவும், இரவில படிச்சிட்டுப் படுக்கிறதுக்கும் தான் வீடு. வீட்டில இடமில்லாததால தான் பெடியள் எல்லாரும் ஒழுங்கை முடக்கு, உடைஞ்ச மதில் எண்டு தஞ்சமடைஞ்சு குறுப்பாச் சேந்து அதையே ஆக்கிரமிச்சு இருப்பாங்கள். அதில மட்டும்தான் அவங்கடை சண்டித்தனம். இதை விளங்காம அப்ப பெடியளை எல்லாம் ஊர் மேயுறாங்கள் எண்டு சொன்னது பிழை எண்டு நெக்கிறன். குடும்ப வாழ்க்கை இப்பிடி அறையில தொடங்கி அறைக்குள்ளேயே முடிஞ்சிடும். இதால ஒரு நல்லது கெட்டதாவது அறையைத்தாண்டி வீட்டில நடக்கட்டும் எண்டு தான் எல்லாத்திலேம் வீடு எண்டு சேர்க்கை வாறது எண்டு நெக்கிறன். அதோட நல்லது கெட்டது எல்லாம் வீட்டை வைச்சுத்தான் செய்யிறது வழமை . கலியாண வீடு, சாமத்திய வீடு, செத்த வீடு , பூசை வீடு எண்டு. ஆனாலும் இளங்கோ கேக்கிற "சின்னவீடு எண்டு அதுக்கும் வீட்டை சேத்தது ஏன்" எண்ட கேள்விக்கு விடை இல்லை.






# லியோ இன்னொரு பாட்ஷாவா?

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் லியோ படத்தின் கதை அப்படியே பாட்ஷா படத்தின் கதை என சினிமா வட்டாரத்தில் ஒரு தகவல் தீயாக பரவி வருகிறது. ஒரு இடத்தில் பார்த்திபனாக வாழ்ந்து வரும் விஜய் இன்னொரு இடத்தில் லியோவாக சம்பவம் செய்வது தான் கதை என்றும் கூறுகின்றனர். ஆனால், சமீபத்தில் கிடைத்துள்ள தகவலின் படி லியோ படம் பாட்ஷா படத்தின் கதை இல்லை என்றும் வேறு ஒரு கதையைத் தான் லோகேஷ் கனகராஜ் இயக்கி வருகிறார் என்கின்றனர்.

இந்த படத்தில் பாட்ஷா மற்றும் தெறி படத்தில் வருவது போல ஒரு இடத்தில் ஒரு ஆளாகவும் இன்னொரு இடத்தில் இன்னொரு நபராகவும் நடிகர் விஜய் வரப் போவது இல்லை என்றும் டபுள் ஆக்ஷனில் நடித்து தூள் கிளப்ப விடப் போகிறார் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. இரட்டை வேடத்தில் தான் லியோ படத்தில் விஜய் நடித்து வருகிறார் என்பது உறுதி என்றும் ஒரு விஜய்க்கு த்ரிஷாவும் இன்னொரு விஜய்க்கு பிரியா ஆனந்தும் ஜோடி என்கின்றனர்.

# மீண்டும் விக்ரம் - ஐஸ்வர்யா

மணிரத்னம் இயக்கிய ராவணன் படத்தில் விக்ரமும் ஐஸ்வர்யாராயும் முதன்முறையாக இணைந்து நடித்தார்கள். அதன் பிறகு பொன்னியின் செல்வன் படத்தின் இரண்டு பாகங்களிலும் நடித்தார்கள்.

இந்த படத்தில் ஆதித்ய கரிகாலன் வேடத்தில் விக்ரமும், நந்தினி வேடத்தில் ஐஸ்வர்யா ராயும் நடித்தனர். இந்த நிலையில் மீண்டும் மணிரத்னம் இயக்கும் ஒரு படத்தில் விக்ரமும், ஐஸ்வர்யா ராயும் இணைந்து நடிக்க இருப்பதாக ஒரு புதிய தகவல் வெளியாகியிருக்கிறது.

தற்போது கமலஹாசன் நடிக்கும் 234 ஆவது படத்தை இயக்க ஆரம்பகட்ட பணிகளை தொடங்கியிருக்கும் மனிரத்னம், இந்த படத்தை இயக்கி முடித்ததும் விக்ரம், ஐஸ்வர்யாராய் இணைந்து நடிக்கும் படத்தை இயக்க வுள்ளாராம்.





*எழுதாத கவிதைக்கு முதல் பரிசு குறும்படத்தின் படப்பிடிப்பு பருத்தித் துறை முனைக் கடற்கரையில் இடம்பெற்றபோது. அனித்தா, ஜெயந்தன், இயக்குநர் ஒளிப்பதிவாளர் கண்ணா.*

# விடாமுயற்சியில் இரு அஜித்



துணிவு படத்தை அடுத்து மகிழ் திருமேனி இயக்கும் தனது 62 ஆவது படமான விடாமுயற்சியில் அடுத்த மாதம் முதல் நடிக்க போகிறார் அஜித்குமார்.


அனிருத் இசையமைக்கும் இந்த படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. இதில் அஜித் இரண்டு வேடங்களில் நடிப்பதாக தற்போது ஒரு தகவல் வெளியாகியுள்ளது. அதன் காரணமாகவே இப்படத்திற்கான இரண்டு கதாநாயகிகளை தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார் மகிழ் திருமேனி.

அந்த வகையில் திரிஷா, ஐஸ்வர்யா ராய், கங்கனா போன்ற நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இவர்களில் த்ரிஷா ஒரு நாயகியாக நடிப்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

# தளபதி 68 ஐ இயக்கும் வேங்கட் பிரபு

விஜய்யின் தளபதி 68 படத்தை வெங்கட் பிரபு இயக்க வுள்ளது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.முன்னதாக இந்தப் படத்தின் இயக்குநர் லிஸ்ட்டில் அட்லீ, கார்த்திக் சுப்புராஜ், கோபிசந்த் மலினேனி ஆகியோரின் பெயர்கள் அடிபட்டன.மேலும், விஜய்யின் தளபதி 68 படத்தை சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கவுள்ளதாகவும் சொல்லப்பட்டது.

ஆனால், தற்போது தளபதி 68 படத்தை ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.னிடையே விஜய் - வெங்கட் பிரபு இணையும் தளபதி 68 படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கவுள்ளதும் கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.









Jasmine Silk House
ஆடைகளின் ராணி
அனைத்து சேலைகள், பஞ்சாபிகள்,
சேலைகளுக்கான பாதணிகள் யாவும்
அதிரடி மலிவு விலையில்.
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Wuppertal நகரில்...
Asia Lebensmittel
மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை
மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மரக்கறி வகைகளுக்கும்
கடல் உணவு வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்
Asia Lebensmittel
Getränke Tabak Süßigkeiten
+49 176 62728598 | 020289012114
Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
SALE
Stuttgart நகரில்...
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam
Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de


akr
VISUALIZERS
Photography
AKRVISUALIZERS
+ 49 162 803 1647
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698